திருவள்ளுவர் ஆண்டு 2039

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி :102 பகுதி :9 | செப்டம்பர் - 08 | விலை ரூ. 10/-



மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

# வாசகர் வாசகம்

இனிய செந்தமிழ் ஆசிரியர் ஐயா இரா.அழகுமலை அவர்களுக்கு,

வணக்கம். தங்கள் நலம், தலைவர் நா.குமரன் சேதுபதி மற்றும் உள்ள பொறுப்பாளர்கள் நலம் ஓங்குக.

தாங்கள் 'செந்தமிழ்' சூலை இதழில் தீட்டியிருந்த இந்த எளியவனின் 'அனல் மூச்சு' நூல் மதிப்புரை மட்டிலா மகிழ்வூட்டியது. தாங்கள் பேருழைப்பேற்று, நுல் முழுதும் தோய்ந்தாய்ந்து படித்து எழுதிய அம்மதிப்புரை எனக்கு ஞானபீட விருது கிடைத்த பேருவகையை அளித்தது. நெஞ்சாரப் போற்றி நன்றி கூறுகிறேன்.

நூன் வரிகளைக் குறிப்பிட்டு, தாங்கள் கற்கண்டு வரிகளில் பாராட்டிய தொடர்கள் என் இலக்கியப் பயணத்திற்குப் பேருட்டமாக அமைவது திண்ணம். தங்களை என்றும் மறவேன்.

இத்துடன் 'செந்தமிழ்' இதழுக்கு என் இரு கவிதைகளையும், தாங்கள் கேட்ட வண்ணம், நூற்றாண்டு விழா மலர் வாழ்த்துரையும் அனுப்பியுள்ளேன். கடந்த ஓரிரு இதழ்களில் என் கவிதை இடம் பெறவில்லை. ஏற்கனவே நான் அனுப்பிய மடல்கள் கிடைக்கவில்லை என்னும் கவலையில் உள்ளேன். அருள்கூர்ந்து, மிகச்சிறந்த என் கவிதைகளை வெளியிட்டால் மிகவும் நன்றி கூறுவேன்.

தங்கள் அன்புள்ள,

கவிவேந்தர் *கா. வேழவேந்தன்*

முன்னாள் அமைச்சர், சென்னை.

"மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் "செந்தமிழ்" திங்கள் தோறும் அரிய தகவல்களால் மெருகேறி வருகிறது. ஆழ்ந்து அறிந்த நூல் மதிப்புரையும், கருத்திலக்கியக் கட்டுரைகளும் தமிழுக்கும், தமிழர்களின் அறிவு வளர்ச்சிக்கும் ஏற்றம் தரக்கூடிய வகையில் அமைந்துள்ளது. செந்தமிழ் இதழின் வளர்ச்சியில் தமிழ்த்தாய் அறக்கட்டளையும் தனது பங்கை ஆற்றும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி!

தாழ்மையுடன்

*உடையார் கோயில் குணா*

தஞ்சாவூர்.

# செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 102
பகுதி : 9
***செப்டம்பர்*** 2008

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு **2039**




| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

முகவை மன்னர் **நா.குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்

**ஆசிரியர்**
**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்


வாசகர் வாசகம் — 1

இதழ்மணம் — 4

கல்வெட்டுகள் : வரலாற்றின் வாயிற்படிகள்! — 5

கல்லறைகளைத் தாண்டி வாழும் கலைகள் — 9
முனைவர் கு. குழந்தைவேல் பன்னீர்செல்வம்

வாய்மையே நேர்மை! — புலவர் செ.ஜஃபர் அலி, பி.லிட். — 17

சிற்பியின் சீரிய சிந்தனையா? — ஆ.தி. பாலசுந்தரன், — 18

உயர்தனிச் செம்மொழி — 22
வி.கோ.சூரியநாராயண சாஸ்திரி பி.ஏ.

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் சித்திரகவிக் கல்வெட்டும் சிவபுராணக் கூறுகளும் — 25
முனைவர் பி.ஆறுமுகம்

பாரதிதாசன் பாடல்களில் மானுட நேயம் — 33
முனைவர் மா.இராமச்சந்திரன்

திருக்குறளில் வியப்பு — ஆறுவிரல் ஜம்போறி — 37

இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்றுங்கள் — 39
முதல்வர், டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி

ஞானி புகழ்ந்த மானி — தமிழாசிரியர் தெ.முருகசாமி — 41

# இதழ் மணம்

மதுரைத் தமிழ்ச் சங்கமும், செந்தமிக் கல்லூரியும் மதுரை அரிமா சங்கத்துடன் இணைந்து கே.கே.நகர் 62வது சுதந்திர தினவிழாவை இனிதாகக் கொண்டாடிய மனநிறைவுடன் செப்டம்பர் மாத இதழ் வெளிவருகின்றது.

வாசகரின் மனநிறைவே இதழின் வெற்றி என்பதை வெளிக்காட்டும் வகையில் வாசகர் வட்டம் முதல் பகுதியாக அமைந்து இதழைச் சிறப்பிக்கிறது.

நாட்டின் வரலாற்றை உலகிற்கு வெளிக்காட்டுவது கல்வெட்டுகள் என்பதும் அதற்கு உறுதுணையாக விளங்குவது இலக்கியங்கள் என்பதும் முனைவர் க.குழந்தைவேல் பன்னீர்செல்வம் அவர்களின் கட்டுரையில் உறுதிப்படுகிறது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி தமிழரின் சிறப்புமிகுந்த கூத்துக்கலையை நசுக்கி வருவதை, கல்லறைகளைத் தாண்டி வாழும் கலைகள் என்னும் கட்டுரை வெளிக்காட்டியுள்ளது.

'போலச் செய்தல்' என்னும் இலக்கிய உத்தியின் அடிப்படையில் அமைந்துள்ள 'வாய்மையே நேர்மை' இக்காலச் சமூகக் கண்ணாடியாக' திகழ்கிறது.

ஒவ்வொரு புராணச் செய்தியிலும், மருத்துவம் அல்லது அறிவியல் உண்மைகள் புதைந்து கிடக்கும் என்பதைச் சூட்சுமமாக ஆதி.பாலசுந்தரன் தன் கட்டுரையில் வெளிப்படுத்தியுள்ளமை சிறப்பளிக்கிறது.

பழமை என்றென்றும் சிறப்பு வாய்ந்தது என்பதை வெளிக்காட்டும் விதமாக வி.கோ.சூரியநாராயண சாஸ்திரி (பரிதிமாற்கலைஞர்) அவர்களின் கட்டுரை இவ்விதழில் வெளிவந்துள்ளது.

நம்நாட்டின் தொண்மைக் கலைகளையும் சிறப்புகளையும் வெளிப்படுத்தும் பணியைச் செந்தமிழ்க் கல்லூரியின் முன்னாள் மாணவர், தலைமைக் காவலர் முனைவர் பி.ஆறுமுகம் தன் கட்டுரை வாயிலாகச் செய்துள்ளது பாராட்டிற்குரியது.

அரசியல் விடுதலைப் போராட்டக் காலத்தில் மானுட நேயம் முக்கிய தேவை என்பதை மனத்திற்கொண்டு பாரதிதாசன் தன் பாடல்களில் மானுடநேயத்தை வெகுவாகப் பாடியுள்ளார் என்று முனைவர் மா.இராமச்சந்திரன் தன் கட்டுரையில் வெளிக்காட்டியுள்ளார். இன்னும் தொடரும்.

ஒவ்வொரு தமிழரின் உணர்வுகளையும் வெளிக்காட்டும் கண்ணாடியாகத் திகழும் நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர்.கலைஞர் கருணாநிதி அவர்களின் உரை இதழைச் சிறப்பு செய்கிறது.

நான்காம் தமிழ்ச்சங்கத்தின் நிறுவனர் பொன்.பாண்டித்துரைத்தேவர் அவர்களின் புகழ்பாடும் கவிதை இதழை மணக்கச் செய்கின்றது.

பழமையைப் போற்றும் சிறப்பிதழாக இவ்விதழ் அமைந்துள்ளது. மனநிறைவைத் தரும் என நம்புகிறோம்.

# கல்வெட்டுகள் : வரலாற்றின் வாயிற்படிகள்!

முனைவர் கு.குழந்தைவேல் பன்னீர்செல்வம்*

தமிழகத்தின் பண்டையகால வரலாற்றை இளையோர்களுக்கு – மாணவர்களுக்கு அறியத் தருவதில் இலக்கியத்தைவிட சாசனங்களே மிகவும் பயன்படுகிறது என்பது ஒரு கருத்து. சாசனங்கள் இன்றியமையாதவை என்பதற்குத் தடையில்லை. ஆனால், வரலாற்று உண்மைகளை அறிந்து கொள்வதற்கு இவை மட்டும் போதாது. வரலாற்றுக்குரிய அடிப்படைச் சான்றுகளாகச் சாசனங்களை முழுவதுமாக நம்புவதற்கில்லை. அவற்றை இலக்கிய ஆதாரங்களைக் கொண்டு உறுதிப்படுத்தலாம். ஒவ்வொரு காலத்திலும் நடைபெற்ற நிகழ்ச்சிகளையும் அக்கால நிலைமைகளையும் சீர்தூக்கிப் பார்த்து பயன்படுத்தலாம். இதற்கு இலக்கியங்கள் மிகவும் முக்கியமானவை.

## கல்வெட்டுகளின் காலம்

கல்வெட்டுகள் பல்லவர் காலத்தில்தான் முதலில் தோன்றின என்ற தவறானக் கருத்து ஒன்று உள்ளது. உண்மையில், கல்வெட்டுகள் சங்க காலத்திலேயே தோன்றியுள்ளன. நடுகற்களும் அவற்றில் உள்ள சிறு குறிப்புகளும் இதைக் கூறுகின்றன.

'காட்சி கால் கோள் நீர்ப்படை நடுகல்' (புறம்.5)

'அணிமயிற் பீலிசூட்டிப் பெயர் பொறித்து
இனி நட்டனரே கல்லும்' (புறம்.60)

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

சங்ககால வரலாற்றை உருவாக்குவதில் கல்வெட்டுகளும், பெரும்பாலும் இலக்கியங்களும் ஆதாரமாக உள்ளன. சங்ககால தமிழகக் கல்வெட்டுகள் 'தமிழ் பிராமி'க் கல்வெட்டுகள் என அழைக்கப்படுகின்றன. சுமார் எண்பது கல்வெட்டுகளின் சுருக்கமான குறிப்புகள் சங்ககால வரலாற்றைக் கூறுகின்றன. ஒவ்வொன்றும் மூன்று அல்லது நான்கு வரிகள் அடங்கியவை. தமிழ் – பிராமிக் கல்வெட்டுகள் ஆனைமலை, ஐவர்மலை, அழகர்மலை, மேட்டுப்பட்டி,

திருவாதவூர், சித்தன்ன வாசல், குன்றக்குடி முதலிய இடங்களில் காணப்படுகின்றன. சில கல்வெட்டுகள், பண்டைய பாண்டிய மன்னர்களோடு தொடர்புடையவை. இவை பல சமணத் துறவிகளுக்கு நன்கொடைகளாய் குகைகளை அளித்ததைக் குறிப்பிடுகின்றன. கொடையளித்த மன்னர், வணிகர் முதலியோர் எனத் தெரிகிறது. வணிகர்களின் நிறுவனங்கள் இருந்தது எனவும் தெரிகிறது.

சமணத் துறவிகள் பலருடைய பெயர்களும் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. காசபன், செங்காயபன், மாதவிரை, சந்திர நந்தி ஆகிய பெயர்கள் உதாரணங்கள் ஏறத்தாழ தமிழ்ச்சங்க காலத்தை ஒட்டியவை. பல்லவர் காலம் முதல் கல்வெட்டுகள் விரிவான முறையில் அமைந்துள்ளன. பல விபரங்கள் அவற்றிலிருந்து அறியப்படுகின்றன. கி.பி.நான்காம் நூற்றாண்டு வரை தோன்றிய பல்லவச் செப்பேடுகள் பிராகிருத மொழியிலும் அதற்குப் பின் சிலகாலம் சமஸ்கிருதத்திலும் பிற்காலப் பல்லவ சாசனங்களில் முதலில் ஒரு பகுதி சமஸ்கிருதத்திலும் இறுதிப் பகுதி வட்டார மொழியிலும் அமைந்தனவாகக் காணப்படுகின்றன. கி.பி. பத்தாவது நூற்றாண்டு முதல் தமிழிலேயே கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டன. கி.பி.ஆறாம் நூற்றாண்டு முதல் கல்வெட்டுகளின் எண்ணிக்கை மிகுதியாயின என்கிறார் கே.கே.பிள்ளை. (தமிழக வரலாறும் சாசனங்களும், தமிழியல்–7, உ.த.ஆ.நி. சென்னை,1975)

## கல்வெட்டுகளின் நிலைகள்

கல்வெட்டுகள் அல்லது சாசனங்கள் பொதுவாக ஆறு பகுதிகளைக் கொண்டவை. இறைவழிபாட்டு மங்களப் பாடல் பெரும்பாலும், மங்களம் உண்டாகட்டும் என்பதை அறிவிக்கும் ஸ்வஸ்திஸ்ரீ என்ற சொல்லுடன் கல்வெட்டு தொடங்குகிறது. இரண்டாவதாக மெய்க்கீர்த்தி எனப்படும் சாசனத்தை வழங்கிய அல்லது அக்காலத்தில் அரசு புரிந்த மன்னன் பெயர், நற்செயல்கள், அவரது முன்னோர்களின் புகழுரைகள் ஆகியன இடம்பெறுகின்றன. மூன்றாவதாகக் கொடை அளிப்பவரின் விபரம், நற்குணங்கள், முன்னோர்களின் பெருமைகளைக் கூறும். நான்காவதாகக் கொடையாக அளிக்கப்படும் பொருள் பற்றிய குறிப்புகளும்

எழுதப்பட்டிருக்கும். ஐந்தாவதாகக் கொடையை அளிக்கும் முறை குறிப்பிடப்படும். இதில் கொடையாளி தண்ணீர் வார்த்துக் கொடையை அளிக்கும் சடங்கின் விபரம் இருக்கும். இது வரலாற்றுக்குத் தேவையற்றது எனினும் வாழ்வியல் முறைகளை அறியப் பயன்படும். இறுதியாக ஆறாவது பகுதியில் நன்கொடையை அனுபவிப்பதற்கு இடையூறு விளைவிப்போர் மீது இடப்படும் சாபமும், அதைப் பேணுபவர்க்குக் கூறும் வாழ்த்துரையும் இடம்பெறும். ஆனால், எல்லாக் கல்வெட்டுகளும் நன்கொடைகளைப் பற்றிக் குறிப்பிடுவதில்லை. சில கல்வெட்டுகள் அந்நாளில் நிலவிய பண்பாட்டை விளக்கும் முறையில் தனிப்பெருமை வாய்ந்தவை. குடுமியான்மலைக் கல்வெட்டு இசைப்பயிற்சி முறைகளைக் கூறுகிறது. இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் மன்னன் 'விசித்திரசித்தன்' என்னும் முதலாம் மகேந்திரவர்மனே என்று காலஞ்சென்ற இசைக்கலை அறிஞர் திரு.சாம்பமூர்த்தி தகுந்த காரணங்களோடு விளக்கியுள்ளது இசை வரலாற்றில் ஓர் அடிப்படைச் சான்றாக உள்ளது.

## கல்வெட்டுகளும் இலக்கியங்களும் – முரண்பாடுகள்

மிகைப்பட கூறுவது இலக்கியத்தைச் சார்ந்தது மட்டுமல்ல. பல கல்வெட்டுகளிலும் கூறப்பட்டுள்ளன. மன்னர்களைப் புராண இதிகாசங்களில் வரும் பெயர்களோடு இணைத்துக் கூறுவதும், வீரச்செயல்கள் பற்றியும் மிகைப்படக் கூறப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, பெரிய சின்னமனூர்க் கல்வெட்டு சமஸ்கிருதப் பகுதியில் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் உலகம் முழுவதையும் தன் குடையின் கீழ்க் கொண்டு வந்தான் எனக் கூறப்பட்டுள்ளது. பல்லவ மன்னர் சிலரைப் பற்றி மிகைப்படக் கூறியிருப்பதற்கு, தண்டந்தோட்டம் செப்பேடுகளையும், கசாகுடிக் கல்வெட்டுகளையும் குறிப்பிடலாம்.

அரசியல் நிகழ்ச்சிகளை அறிவிப்பதோடு, ஆட்சிமுறை, மக்களது சமூக வாழ்க்கை, பொருளாதார நிலை, பண்பாடு முதலியவற்றை அறிவதற்குக் கல்வெட்டுகள் உதவியாயிருக்கின்றன. ஆனால், இத்துறைகள் பற்றி இலக்கியங்கள் விளக்கும் உண்மைகள் அதிகம். கவிஞர்களின் கற்பனைகள் ஒரு பக்கமிருக்க அவர்கள் துலக்கும் உண்மைகள், விபரங்கள் முதலியவை வரலாற்றிற்கு இன்றியமையாதவை. மூவர் உலா, பெரியபுராணம், சீவகசிந்தாமணி

முதலிய இலக்கியங்கள் சமூக வாழ்க்கையைப் பற்றி விளக்குகின்றன. இலக்கியங்களையும் கல்வெட்டுகளையும் சீர்தூக்கிப் பார்த்து வரலாற்றைத் தெளிதல் வேண்டும்.

இலக்கியங்களில் காணப்படும் சில உண்மைகள், கல்வெட்டுகளில் குறிப்பிடவில்லை என்பது உண்மைதான். பல்லவர்களுடைய வெளிநாட்டு வணிகம், படையெடுப்புகள் ஆகியவற்றைப் பற்றிய விபரம் கல்வெட்டுகளில் காணவில்லை. ஆனால், திருமங்கையாழ்வாரது பதிகங்களிலும் நந்திக் கலம்பகத்திலும் பல்லவரது கடற்படையைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. முத்து, யானை போன்றவை பல்லவர்களுடைய நாட்டிலிருந்து ஏற்றுமதியானது பற்றிக் கல்வெட்டுகள் ஒன்றும் கூறவில்லை. திருமங்கையாழ்வாரது பதிகங்கள் இதைக் குறிப்பிடுகின்றன. பல்லவர்களுடைய கல்வெட்டுகளில் நந்திவர்மன் காலத்துத் தெள்ளாற்றுப் போர்ச் செய்திகள் மட்டுமே கூறப்பட்டுள்ளன. ஆனால், இலக்கியங்கள் பல போர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

## கல்வெட்டுகளும் காலங்களும்

காலத்தை வரையறுப்பதற்குக் கல்வெட்டுகள் பேருதவி அளிக்கின்றன. சுகாப்தம், கொல்லமாண்டு முதலிய ஆண்டுகளைக் குறிக்கும் சாசனங்கள் உண்டு. ஆனால் அத்தகையவை மிகக் குறைவு. பண்டைய பாண்டியரின் வரலாற்றை முறைப்படுத்துவதில் ஆனைமலை, ஐவர்மலை ஆகிய இரு கல்வெட்டுகள் இரண்டு கலியுக ஆண்டுப்படி காலத்தை முறையே கி.பி.770ஆம் ஆண்டு என்றும் கி.பி. 870ஆம் ஆண்டு என்றும் கூறுகின்றன. திட்டமாகக் காலத்தை அறிய முடியாத கல்வெட்டுகளை எழுத்தின் வடிவத்தை (Paleography) ஒட்டி கணக்கிடுகின்றனர். ஆனால், இது முழுமையானதன்று. வேறு ஆதாரங்கள் கிடைக்காத காலத்தை வரையறுப்பதற்கு இலக்கிய நடை, இலக்கியத்தில் காணும் வாழ்க்கை முறை முதலியவை கொண்டுதான் காலத்தை நிர்ணயிக்க முடியும். ஆகவே விருப்பு வெறுப்பின்றிச் சீர்தூக்கிப் பார்த்து வரலாற்றை அறிவதற்குக் கல்வெட்டுகளும் ஒரு முக்கிய ஆதாரங்களேயாகும்.

# கல்லறைகளைத் தாண்டி வாழும் கலைகள்

முனைவர் க. குழந்தைவேல் பன்னீர்செல்வம்*
திருச்சி

## சமுதாய இயக்கத்தில் கலைகள்

இவ்வுலக வாழ்க்கையின் நடப்புக்காக மனிதன் பல்வேறு தொழிற்பாடுகளை இயற்றுகின்றான். இவற்றுள் அன்றாட வாழ்க்கையின் பொருட்டுச் செய்வனவற்றைத் தொழில்கள் எனவும், வாழ்க்கையின் இயக்கத்திற்கு வேண்டப்படாதவாயினும், மனிதன் தன் மன மகிழ்ச்சியின் பொருட்டுச் செய்வனவற்றைக் கலைகள் எனவும் பகுத்துணரலாம். பயனை மட்டும் நோக்கிச் செய்யப்படும் வினைநிகழ்ச்சி தொழிலாகிறது. அழகுணர்வை மட்டும் கருதி இயற்றப்படுவது கலையாகிறது என்கிறார் மணவாளன்.

இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தின் வாழ்வியலில் மனிதனுடைய பங்கு தொடர்ச்சியாக இருக்கும் போதுதான் மனித வாழ்க்கை உயிர்ப்புடனிருக்கும். ஒரு நாட்டின் வளர்ச்சியையும் நாகரிகத்தையும் அந்நாட்டில் நிலவும் கலைகளைக் கொண்டே அளவிட முடியும். கலைகள் வெறும் பயன் நோக்கிச் செய்யப்படுவன அல்ல. மனத்தால் உணர்ந்து துய்க்கப்பெறுவது. அழகுணர்வால் தோன்றி அழகுணர்வைத் தருவதற்காகவே படைக்கப்படுவன கலைகள் என்ற கருத்தும் உண்டு. தமிழக மக்களின் வாழ்க்கை முறைகளையும், சமயக் கோட்பாடுகளையும் பார்க்கும்போது அவர்கள் பல்லாற்றானும் சிறந்து மேம்பாட்டுடன் விளங்கிய ஓர் இனத்தினர் என்பது புலப்படும்.

## கலைகளால் சமுதாய இணைப்பு

தமிழ்மண்ணின் முடிமன்னர் மூவரும் அவர்களின் ஆணைக்குட்பட்ட குறு மன்னரும், பெருநிலக்கிழாரும் கண்ணுங்

கருத்துமாயிருந்து குடிகளின் கலைகளைக் குழந்தையைப் போல பேணி வளர்த்தனர். இதுதான் அந்நாளில் இசை, கூத்து போன்ற கலைகளும் பொருட்களை அழகுற அமைக்கும் தொழில் திறமும் வளர உதவின. இவற்றில் இசையும், கூத்தும் மக்களின் வாழ்வோடு ஒன்றியே வளர்ந்து வந்தன. மனித சமுதாயத்தையும் விலங்கினத்தையும் பிரித்து இனங்காணும் கருவிகளுள் கலையும் ஒன்றாகும். இக்கலைகளில் நடன மற்றும் நாடகக்கலை மனித சமுதாயத்தின் உழைப்பு நெறியில் உடன் பிறந்ததாகும். ஆதி காலத்தில் வர்க்க பேதமற்ற சமுதாய இயக்கமே காணப்பட்டது. இனக்குழு மக்களே சமூகமாக இணைந்து கூட்டு வாழ்க்கை நடத்தினர். கூட்டமாக இணைந்தே தொழில்பட்டனர்; உற்பத்தியைப் பெருக்கினர்; சேர்ந்து நுகர்ந்தனர். இதனை அவர்களது கலைகளும் வெளிப்படுத்துகின்றன. சமுதாய ஆற்றல்களே ஒரு கலைஞனையும் அவனது படைப்பினையும் உருவாக்கி நிலைப்படுத்துகின்றன. சமுதாயத்தின் ஒரு வெளிப்பாடுதான் கலை என்றும், சமுதாய ஆற்றல்கள் தவறாமல் கலைஞனின் போக்கையும் அவனது படைப்பாற்றலையும் உருவாக்குகின்றன என்றும் கூறப்படுகிறது. இவ்வாறு சமுதாய ஆற்றல்கள் தாக்கம் கொள்ள பல மாற்றங்கள் தோன்றி ஒரு கால எல்லைக்குள் நாடகக் கலையும், கலைஞர்களும் வாழ்ந்தனர்.

கலைஞனின் வெற்றி அவன் தன் கலைமீது கொண்டிருக்கும் நம்பிக்கை சார்ந்தது மட்டுமின்றி தான் அடையாளப்படுத்தும் கலாச்சார கூறுகளின் மீது அவன் கொண்டிருக்கும் நம்பிக்கையையும் ஈடுபாட்டையும் சார்ந்தும் வேறுபடக்கூடியது. கலைஞன் சமுதாயச் சிந்தனைகளை நடப்பியலாக (Realism) உருவாக்கவும் முடியும். நாளைய நடப்புகளை இன்றே கொண்டு வந்து நிறுத்திடவும் முடியும். தாழ்வு மனப்பான்மையும் அவநம்பிக்கையும் கொண்ட கலைஞனால் தன்

சொந்த அடையாளங்கள் குறித்த படைப்புச் செயல்பாடுகளுக்கு கற்பனையைச் சார்ந்திருக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகிறது.

## நாடகக்கலை

மண் தோன்றி, உயிர்கள் தோன்றியபின் மனிதன் தோன்றினான். அவன் மனதில் உணர்வுகள் தோன்றின. உணர்வுகள் வெளிப்பட அசைவுகள் தோன்றின. அந்த அசைவுகளே நாடகத்தின் தோற்றமாக ஆயின. மனிதனின் உணர்வுகளையும் எண்ணங்களையும் பரிமாறிக்கொள்ள இயல்பாக நிகழ்ந்த அசைவுகள் ஆடல், பாடல், இசை என்ற முத்தமிழ் தோன்றக் காரணமானது. ஆடற்கலையின் பரிணாம வளர்ச்சி இங்குதான் ஆரம்பமானது.

மனித நாகரிகத்தின் தெளிவான கண்ணாடியாக விளங்கும் நாடகக்கலை, மனிதர்கள் கூட்டமாக சங்கமிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியது. அது வாழ்க்கை மீது நம்பிக்கையையும், உற்சாகத்தையும் கொடுத்தது. சமூக, சமய பண்பாட்டுப் பின்னணிகளில் இக்கூத்து முறைகள் வரையறுக்கப்பட்டன. கூத்து என்பது சமூகத்தின் அடித்தட்டு மக்களின் அறியாமையை அகற்றி, காமம், கோபம் போன்ற உணர்வுகளிலிருந்து மடைமாற்றி நல்வழிப்படுத்தி வாழ்வில் செம்மையான வழிப்பாதையாக நல்லறங்களைக் கூறிய கூத்துக்கலை தலைநிமிர்ந்து நடைபோட்டது.

"உள்ளத்தே எழும் உணர்வைச் செய்கை காட்டி
உதட்டசைவில் விழியசைவில் முகத்தில் தோன்றும்
வின்னவொணா அசைவிலெல்லாம் ஆடிக்காட்டி
விளம்புவது நாடகமே! காண்போர் தம்மின்
உள்ளத்தைக் கவர்வதும் கருத்தை ஊட்டிக்
களிப்பதனை ஊட்டுவதும் துயரை மாற்றித்
தெள்ளுதமிழ் இசையுடனே ஆடல் பாடல்
தித்திக்க அளிப்பதுவும் நாடகம்தான்"

என்கிறார் புதுவை கல்லாடன்.

இந்த சாமான்ய மக்களின் கலைவடிவான தெருக்கூத்து இன்று மெல்ல மெல்ல மறைந்து கோயில் திருவிழாக்களில் 'ஆடல், பாடல்' என்ற பெயரில் ஆபாச நடனமாகியது. கூத்தின் வளர்ச்சி, மேடை நாடகமாக ஆக்கம் பெற்றது. அறிவியல் வளர்ச்சியும் பொருளியல் ஏற்றமும் திரைப்படங்களை உருவாக்கி, தற்போது தொலைக்காட்சித் தொடர்கள் மக்களை ஆட்கொண்டுவிட்டன. பல்வேறு வகையான மக்கள் குழுக்களின் மரபு சார்ந்த கலாச்சாரத்தை அழியாமல் பாதுகாக்கவோ, வளர்த்து செழுமைப்படுத்தவோ முதலாளித்துவத்தால், பொருளியல் வளர்ச்சியால் முடியாது. நலிவுற்ற இந்த அடித்தட்டு மக்கள்தான் கலை வடிவங்களை, உற்பத்தி கலாச்சாரத்தைத் தீர்மானிக்கிறார்கள் என்று உணர்த்தியவர் கார்ல் மார்க்ஸ். வியர்வை சிந்தி நிலத்தில் ஓயாது உழைத்தவர்களுக்கு காலமெல்லாம் குடும்பம், வறுமை, மனபாரம் என உழன்று கொண்டிருந்தவனுக்கு ஓர் ஆறுதல் தேவைப்பட்டது.

குடும்பத்துடன் அதே நேரத்தில் அதிக மக்களை ஒருநிலைப்படுத்தி விளைவிக்கும் கலையாக நாட்டுபுறக் கலைகள் இருந்தன. மக்கள் வாழவேண்டிய வழிமுறைகளை வகுத்தளித்தன. அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்ததினாலேயே தான், பொய் சொல்ல மாட்டேன் என்ற சத்தியத்தைக் கடைபிடித்தார் காந்தியடிகள். சான்றோர்களின் உரை, ஆராய்ச்சிக் கட்டுரைகளால்கூட ஏற்படுத்திட முடியாத தாக்கத்தை ஒரு சிறிய நாடகம் உண்டாக்கிவிடும் என்பதற்கு இதுவே சான்று. இப்படி ஒவ்வொருவரின் வாழ்விலும் ஒரு தாக்கத்தை நாடகக்கலை ஏற்படுத்திக் கொண்டுதான் இருந்தது. அதனால்தான் அறிவியல் வளர்ச்சி உச்ச நிலையில் உள்ளபோதும் கல்வி, குடும்பக்கட்டுப்பாடு, எய்ட்ஸ் போன்ற விழிப்புணர்வு செய்திகளை மக்களிடம் சேர்க்க அரசு நாட்டுப்புறக் கலையைப் பயன்படுத்துகிறது. இன்றைய சமூக அமைப்பில் உலகமயமாக்கலும் தாராளமயமாக்கலும் சந்தைப் பொருளாதார

வளர்ச்சியும் மனிதனை நுகர்வு கலாச்சார அடிமைகளாக மாற்றிவிட்டது. 'மனிதம்' என்ற உன்னத கலையின் அடையாளம் அழிக்கப்பட்டு குடும்ப உறவுகள், சமூக உறவுகள் எல்லாம் பணம் சார்ந்த உறவுகளாக மாற்றப்பட்டுள்ளன.

## தமிழர்களும் நாடகக் கலையும்

நாடகக்கலை வளர்ச்சியில் தமிழர்கள் நீண்டகாலமாகவே நாட்டம் செலுத்தி வந்துள்ளனர். தமிழின் மூவகைகளுள் ஒன்றாகவே இன்றும் அது விளங்கி வருகிறது. அழகுணர்ச்சியின் விளைவாக மட்டுமல்லாமல் நாடகம் அறிவுத் தூண்டலுக்கு உரியதாகவும் காட்சி தருகிறது.

பத்தொன்பது - இருபதாம் நூற்றாண்டுகளில் மக்களிடையே பல பயனுள்ள செய்திகள் நாடகத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டன. அத்தகைய செய்திகளுள் மிகவும் குறிப்பிடத்தக்கது 'நாட்டுப் பற்று'. இந்தியா அடிமைத்தளையில் சிக்கி உழன்று கொண்டிருந்த காலகட்டம் அது. மக்களை எழுச்சிபெற செய்வதற்குச் சுதந்திர உணர்வினை ஊட்ட வேண்டிய ஒரு கட்டாய நிலை இருந்தது. நாடகம் இதற்குச் சிறந்த கருவியாயிற்று. எஸ்.என்.விசுவநாததாஸ், டி.ஆர்.கோமளம், எம்.பி.அப்துல்காதர், எஸ்.ஜி.கிட்டப்பா, தெ.கிருஷ்ணசாமிப் பாவலர், வெ.சாமிநாதசர்மா, எஸ்.டி.சுந்தரம், கோவை அய்யாமுத்து, அவ்வை தி.க.சண்முகம், அவரது சகோதரர்கள் தி.க.முத்துசாமி, தி.க.பகவதி, என்.எஸ்.கிருஷ்ணன், கே.ஆர்.இராமசாமி, டி.என்.சிவதாணு, எம்.ஆர்.சாமிநாதன் முதலானவர்கள் நாடகக்கலையைக் கட்டிக்காத்து வந்தனர். தமிழ் நாடக அரங்கின் அண்மைக்காலப் போக்குகளுக்கும் தமிழ்ச் சினிமாவின் அண்மைக்கால போக்குகளுக்கும் ஒத்த தன்மைகள் மிகக் குறைவு. விலகலான தன்மைகளே அதிகம்.

## நவீனத்தால் வந்த நலிவு

ஐரோப்பியர்களின் வருகை, மேற்கத்தியக் கல்வி, அதன் வழியான சிந்தனை மரபு உண்டாக்கிய தாக்கம், அவர்களாகவே மாறிவிடுவதில் இருந்த ஆர்வம் போன்றவை தமிழர்களுக்கு 'நவீனம்' (Modern) என்ற சொல்லுக்கான கருத்தியல், செயல்பாட்டுத் தளங்களை அர்த்தப்படுத்த முயன்றன. மேற்கத்திய நவீனத்துவம் சிலவகைப்பட்ட புரட்சிகளின் பின்விளைவுகள் அதன் காரணமாகத் தனிமனித விடுதலையை பாதுகாக்க முயன்ற சமூக படித்தரங்களையும், மதிப்பீடுகளையும் கேள்விக்குள்ளாதல் என்பதை முக்கிய நோக்கங்களாகக் கொண்டிருந்தது. மேற்கத்திய படைப்பாளிகளும், சிந்தனையாளர்களும் 'நவீனம்' என்ற சொல்லை உள்வாங்கியதும், உபயோகிப்பதும் இத்தகைய கருத்தியல், செயல்பாட்டுத் தளங்களோடுதான். ஆனால் தமிழர்கள், நவீனம் என்பதை 'புதியது' எனக் கருத்தியல் ரீதியாக மட்டுமே புரிந்து கொண்டுள்ளனர். மேற்கத்திய நவீனத்துவத்தை ஏற்றுக் கொள்வதிலும் கூட 'புதுமை நாட்டம்' மட்டுமே மேலோங்கி நிற்கிறது எனக் கூறலாம்.

தமிழ் நாடக அரங்கானது அந்த நாட்டத்தோடு நவீனத்துவத்தை நெருங்கியது. ஆனால் தமிழ்ச் சினிமாவோ அத்தகைய உணர்வு நிலையின்றி விலகிப் போய்க் கொண்டேயிருக்கிறது. திரைப்படம் என்ற மாயத் திரையில் அறிவுத் தேடலும், கலையின் உன்னத வெளிப்பாடும், மானிடத்தின் உணர்வுகளும் தொலைந்துள்ளது. ஒரு சமூகத்தின் பண்பாட்டு வரலாறு என்பது ஒற்றைச் சுழிமுனையிலிருந்து எக்காலத்திலும் தொடங்கப்பட்டதில்லை. பல்வேறு விதமான இணைப்புகளும் போக்குகளும்தான் அவற்றைக் கூட்டமைக்க உதவுகின்றன. தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு அசைவியக்கத்தில் இத்தன்மைகள் அதிகமாகவே காணப்படுகின்றன.

1960கள் வரை நாடக வளர்ச்சி போற்றப்பட்டது. அறிவியல் வளர்ச்சி, அவசர வாழ்க்கை, நாகரிகம் போன்றவை இக்கலையில் பின்னுக்குப் படிப்படியாகத் தள்ளப்பட்டுவிட்டது. இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட சின்னத்திரை ஊடுருவல் ஒரு முறை செலவு செய்துவிட்டால், எழுந்து கூட மாற்ற வேண்டாம். உட்கார்ந்த இடத்திலேயே மக்களின் மனங்களைத் தனது கலாச்சார பண்பாட்டிலிருந்து பாதை மாற புதியபாதை போட்டது. சினிமாவின் வளர்ச்சி கூத்துக் கலையைப் பாதித்தது. சின்னத்திரையின் வளர்ச்சி நாடகக் கலையைப் பாதித்தது. ஒரு காலத்தில் நாடகங்கள் 'சபா'வில் சிறை புகுந்த பின்பு கூட கூத்துக்கலை கிராமப்புறங்களில் நிலைத்தன. ஆனால் தொலைக்காட்சியின் வருகை எல்லா நிலை கலைகளையும் கல்லறை கட்டியது.

## அழிக்கப்பட்ட கலையின் வேர்கள்

பல்வேறு தேசிய இனங்களும் நூற்றுக்கணக்கான எழுத்து மற்றும் எழுத்து வடிவமற்ற மொழிகளும் பலவகையான பண்பாடுகளும் நிறைந்த இந்தியாவில் சமுதாயம், பண்பாடு குறித்த ஆயிரக்கணக்கான 'சர்வே'க்களும் நூற்றுக்கணக்கான ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் நாட்டின் வரைபடத்தில் ஒரு குறிப்பிடத்தக்க அளவில் ஒரு வெற்றிடம் ஓர் இடைவெளி இருக்கிறது. குடும்ப உறவுகளும், சமூக உறவுகளும் சிதைக்கப்படுவதால் பண்பாட்டுக் கூறுகளும், கலாச்சாரங்களும் சிதைக்கப்பட்டு இவற்றின் வேர்களான கலைகளும் அழிக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவின் ஒட்டுமொத்தமான பண்பாட்டுப் பரிணாமத்தில் கலைக் கூத்தாடிகளின் பண்பாடுகள் உள்ளடக்கப்பட வேண்டும். வறுமைதான் வாழ்க்கை என்றதாயினும் மக்களை மகிழ்வித்து, அவர்களது வாழ்க்கையின் செழுமைக்கும், உயர்விற்கும் வழி கூறிய ஒரு சாமான்யக்கலை சமாதி நிலையிலிருக்கிறது. மேலைநாட்டு கலாச்சாரத்தின் மாற்றத்தில் வேகமாகக் கரைந்துவிட்ட மக்களின் போக்கிற்கு ஈடுகொடுக்க முடியாமல் கலைகள் தோற்றுவிட்டன.

## பயன்பட்ட நூல்கள்


1. இராமன். கே.எஸ், பாட்டும் பரதமும், 'தமிழியல்' (25) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ஜூன் – 1984
2. இராமசாமி அ, சமகாலத் தமிழ்நாடக அரங்கும் தமிழ்ச் சினிமாக்களும், தமிழியல் (55,56) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். சென்னை, ஜூன்–டிசம்பர்–1999
3. குமரவேலன். இரா, நாடகத்தில் நாட்டுப்பற்று, 'தமிழியல்' (55,56), உ.த.ஆ.நி, சென்னை, ஜூன்–டிசம்பர்–1999
4. கேசவன்.கோ, நாட்டுப்புறவியல் கட்டுரைகள், புதுமைப்பதிப்பகம், திருச்சி 1987.
5. தேவிபாரதி, நெகிழ்ச்சியின் அழகியல், 'காலச்சுவடு', ஜனவரி– 2006.
6. தனஞ்செயன் அ, தொலைவில் ஒலிக்கும் நாடோடியின் இசை, 'வல்லினம்', மார்ச்–ஆகஸ்ட்–2005.
7. வேலு சரவணன், பள்ளிதோறும் கோமாளி வேண்டும் 'தீராநதி' டிசம்பர் – 2004.
8. சதீசு., அ, நாடோடிகள் வாழ்க்கையும் வரலாறும், 'தீராநதி' டிசம்பர்–2004.
9. சண்முகம்பிள்ளை மு, சங்கத்தமிழர் வாழ்வியல், உ.த.ஆ.நி, சென்னை 1997.
10. கலாவிசு, நாட்டுப்புறக்கலைகள், 'உறவு', 'புதுச்சேரி' பிப்ரவரி– 2006.
11. கல்லாடன், தெருக்கூத்துக் கலையும் மக்கள் கலைக்கழகமும், 'உறவு', புதுச்சேரி, பிப்ரவரி–2006.
12. மணவாளன். அ, இலக்கியக் கோட்பாடுகள் கிழக்கும் மேற்கும், 'கணையாழி' சென்னை, மார்ச்–2005.

# வாய்மையே நேர்மை!

- புலவர் செ.ஜஃபர் அலி, பி.லிட்.
கும்பகோணம்.

(குறள் வெண்பாவின் இலக்கணத்தை அடியொற்றி
இயற்றப் பெற்றது)

வாய்மையே நேர்மையாம் பொல்லாங்குப் பொய்ப்பேசின்
தூய்மை கெடுமே அறி.

அன்புப் பயிரை வளர்ப்பின் மனம்மகிழும்;
வன்மம் மறையுமே காண்.

அழகெனச் சொல்லல் அறிவே; அதனின்
அழகெனப் பண்பே தலை.

மனிதம் வளர்த்தல் அறமாம்; பிறப்பில்
இனியேனும் உண்டோ நலம்.

காய்தல் உவத்தல் அகற்றி நடப்பதே
தூய்மைக்குச் சான்றாம் தெளி.

போதையும் காமமும் என்றும் தடுமாறும்
பாதையும் ஈனமே பார்.

கல்வியே கண்ணும் செவியுமாம்; வாயுடன்
பல்லும் உணவைத்தான் மெல்லும்.

பொதுநலம் பேணின் சுயநலம் போகும்;
மதுபோதை ஏறின் கேடாம்.

பழிச்சொல்லும் பாவமும் ஆண்மைக்
கிழிவுதான் கற்பின்மை பெண்ணே!

வெள்ளமும் பள்ளம்பார்த் தேபாயும்; என்றென்றும்
உள்ளமும் ஓங்கியே நிற்கும்!

# சிற்பியின் சீரிய சிந்தனையா?

ஆதி. பாலசுந்தரன், தனிநிலை ஆய்வர்

சிவன் கோயில்களில் ஆடல்வல்லானாகிய கூத்தப் பெருமான் திருஉருவச் சிலைகள் எல்லாம் நல்லிருப்புச் செய்யப் பெற்றுள்ளன. அவையெல்லாம் வலக்காலை ஊன்றி, இடத்தாளை எடுத்து மடித்து நின்றாடும் திருக்கோலத்தில் அமைந்துள்ளன.

நடராசத் தத்துவம் முழுமையும் கலைத்திறனாய்வர் அறிஞர் ஆனந்த குமாரசாமி உலகறிய விளக்கியுள்ளார்.

படைப்பு முதலான ஐந்தொழிலும் ஆன்மிக உலகில் முதன்மை பெறுவன. "தோற்றம் துடியதனில்" எனத் துவங்கும் சித்தாந்த சைவப் பாவிலும் ஐந்தொழில் உண்மையும், முதன்மையும் விளக்கப் பெற்றுள்ளன.

ஐந்தொழில் முதன்மையைச் சுட்டும் நடராசத் திருமேனி பற்றிச் சங்க இலக்கியங்களில் பேசப்படவில்லையே? என ஐய வினா எழுப்புகிறார் கலாநிதி கயிலாசபதி.

வேத காலத்தில் இந்திரனும், உழையும் தான் ஆடலுக்குரியோர். ஆதலின் ஆடல் வல்லான் திருமேனி பற்றிப் பேசவில்லை என விடையிறுப்பாரும் உளர்.

இங்கு நம் சிந்தனைக்குரியது:

1. மதுரை வெள்ளியம்பலத்தில் இடக்காலை ஊன்றி, வலத்தாளை எடுத்து மடித்து நின்றாடும் திருக்கோலத்திருமேனி காண்கின்றோம் (குஞ்சையிலும் ஒரு தலத்தில் இவ்வரிய சிற்பக்கலை உளது)

எடுத்த இடக்காலை ஊன்றி, நின்ற வலக்காலை எடுத்து வீசி, அரசன் உயிரைக் காத்து, நம்மையும் வியக்க வைப்பதற்குப் பரஞ்சோதியார் ஒரு காரணம் சொல்லுகின்றார். அது ஆலாசிய மான்மியக் 'கைங்கர்ய'மாகவும் இருக்கலாம்.

அது, சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் வாய்க்கப் பெற்ற பாண்டிய மன்னன் இராச சேகர பாண்டியன். ஆய

கலைகள் அறுபத்து நான்கினுள், பரதக்கலை பயின்றிட விழைந்தான். நாடோறும் முயற்சியும் பயிற்சியும் செய்தான். அக்கலை பயிலுதற்கு எளிதா? மேல் மூச்சு வாங்கியது. மேன் முயற்சியால் மூச்சுத்திணறல் ஏற்படும் நிலைக்கு ஆளானான்.

மன்னன் மாற்றிச் சிந்திக்கத் திருவருள் துணை நின்றது. அச்சிந்தனை யாது? 'சில நாள் பயிற்சியிலேயே எனக்கு உடல் வருத்தமும், நலிவும், மூச்சுத் திணறலும் உண்டாகி விட்டனவே! நீண்ட நெடுங்காலமாய், ஒரே காலையே – வலக்காலையே ஊன்றி நடமாடும் பொன்னம்பலத்து முடியாமுதலுக்கு எத்தகைய வருத்தமும் மூச்சுத் திணறலும் ஏற்படக் கூடும்!' எனச் சிந்திக்கலானான்.

அக்காலையே வெள்ளியம்பலம் சென்றான். கூத்தன்முன் நின்றான். தன் உடைவாளைத் தரையில் ஊன்றினான். அத்தா! உன் ஆடல் கண்டு அடியேனும் பயிலத் தொடங்கினேன். எத்துணை உடல் துன்பம்! மூச்சுத் திணறல்! இத்தனை காலமும் இவ்வாறே ஆடுகின்ற நின்றனக்கு எவ்வளவு இன்னலும் மூச்சுத் திணறலும்! உணர்ந்தேன்! உடன், நின்ற தாளை எடுத்து வீசி நீ ஆடாவிடில், இவ்வுடை வாளில் பாய்ந்து என் உயிரை மாய்த்துக் கொள்வேன்!' எனக் கூறிக் கண்ணீர் ததும்பி உளம் வெதும்பினான்.

வேண்டுவார்க்கு வேண்டியாங்கு அருளும் விரிசடையான் உடனே உளமிரங்கி இடக்காலை ஊன்றி, வலக்காலை எடுத்துக் கால்மாறி ஆடி அருளினான். மன்னனும் மாறிலா மகிழ்ச்சியில் திளைத்தான்.

இது, அறுபத்து நான்கு சிவ மூர்த்தங்களுக்கும் ஏற்ப, அறுபத்து நான்கு திருவிளையாடல்களுள், ஒரு திருவிளையாடலாகக் கூறும் செய்தி. இது ஆன்மிக நோக்கில் சரியே.

இச்செய்தியினை நாம் சற்றுச் சிந்தித்தால் சிலை வடித்த சிற்பியின் சிந்தனைச் சிறப்பும், அவ்வாறு வடிக்க அனுமதி வழங்கிய அரசனின் புதுமை ஏற்கும் மன வலிவும் ஒருங்கே புலனாகும்.

மேலும், உடற்கூறு மருத்துவ அறிவியல் உண்மையும் புலனாகும்.

1. அப்புதுமைச் சிந்தனை யாது? எதிர்பாரா வண்ணம் ஒருவருக்கு மூச்சுத் திணறல் ஏற்படின், அவரை நெடுஞ்சாண் கிடையாகத் தரையில் படுக்க வைத்து, இடக்காலை நீட்டியிருக்குமாறு செய்தல் வேண்டும். உடன் வலக்காலை மடித்து பாதத்தை இடக்கால் முட்டி மீது சேர்த்து வைக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதால் மூச்சுக்காற்று (சுவாச ஓட்டம்) சரியாகச் சென்று வரும். இவ்வுடனடி முதலுதவிச் சிகிச்சைக்குப் பின்னர், தொடர்ந்து செய்ய வேண்டிய மருத்துவ உதவிகளைச் செய்தல் வேண்டும்.

இது, 'முதல் உதவிச் சிகிச்சை' நூலில் கூறியுள்ள முறை.

"கால்கை வலிப்பு நோயை (Epilepsy) ஆடற்பெருமான் திருவடிக்கீழ் கிடக்கும் 'முயலகனாக' உருவகப்படுத்தியுள்ளனர் எனவும், நடமாடுங்கால் திருவடி மாறி மாறி அழுத்தும் போது 'அக்குபங்க்சர்' (Acupuncture) சிகிச்சை கொடுப்பதற்கு இணையானது எனவும் கூறுவர்.

இது, மேலும் சிந்தனைக்குரியது.

"நீ, என்னதான் ஒற்றைக் காலில் நின்று சாதித்தாலும் உனக்குத் தரமாட்டேன்!" என்று சொல்லுகின்றோமல்லவா? அவ்வாறு நின்றால் சாதனை பெறலாம்.

இது ஒரு 'பிஸியோ தெரபி முறை'. இப்போது உடற்கூறு மருத்துவர் செய்யச் சொல்கிறார்.

2. இடக்காலைத் தரையில் ஊன்றி, வலக்கால் பாதத்தை இடக்கால் முட்டியில் சேர்த்து, இரு கரங்களையும் 'துவாத சாந்தப் பெருவெளியில்' இணைத்துக் குவித்து, ஒற்றைக் காலில் தவம் இயற்றும் முனிவரின் சிலைகளைக் கோயில்கள் சிலவற்றில் காண்கிறோம்.

3. மலைநாட்டுச் சிவத்தலம் திருவஞ்சைக்களம். அஞ்சைக் களத்து அப்பனைக் காண நால்வருள் சுந்தரர் மட்டுமே சென்றுள்ளார்.

அரசனால் ஆட்சிப் பொறுப்பில் வீற்றிருந்த சேரமான், சேரமான் பெருமாள் ஆகிச் சிவனடியார் ஆகிவிட்டார் சுந்தரர் செல்லுகின்ற காலத்தில்.

மணிமுடி தரித்த மன்னவன் அரனடியான் ஆகிவிட்ட போதிலும், அம்மன்னனைச் சிலையாக வடித்த சிற்பிக்கு, அரசனின் மணிமுடியை அகற்றிட மனமில்லை. மணிமகுடத்தோடு கூடிய சேரமானாகச் சிலை வடித்தான்.

கண்ணுறும் சிலைகளிலும், காட்சி தரும் ஓவியங்களிலும் மணிமுடி தரித்த, மணக்கோலச் சுந்தரரையே நாம் காண்கின்றோம்.

ஆனால் அஞ்சைக்களத்து அப்பன் திருக்கோயிலில், மணிமகுடம் இல்லாத சுந்தரரைக் காண்கிறோம்.

(எங்குமே மணிமகுடத்தோடு கூடிய சத்ரபதி சிவாஜி மன்னனைக் குதிரை 'சேட்டக்' மீது கண்ட நாம், பட்டத்துக் குதிரை 'சேட்டக்' கில் வீற்றிராமல், மணிமகுடம் இன்றி, தம்குரு இராமதாசர் முன்னிலையில், தரையில் சம்மணம் இட்டு அமர்ந்திருக்கும் சிவாஜியாக – ஓவியமாக – தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் காணலாம் – ஒப்பீட்டுக்கு)

பற்றற்றான் பற்றோடு தலந்தோறும் தரைச் செலவு மேற்கொண்டு, எந்தை இணையடிகளைப் போற்றிய சுந்தரருக்குத் திரு அஞ்சைக்களம் அடைந்ததும் ஊன் உயிர் வேறு செய்த உத்தமனைக் கண்டதும், இருக்கின்ற பற்றும் இல்லாது நீங்கிற்று என்பதைக் காட்டவே சிற்பி, மணிமுடி இல்லாத வன்றொண்டரைச் சிலையாக வடித்தார்.

இவையெல்லாம் சிற்பியின் சிந்தனையில் எழுந்த சீரிய கைவண்ணமா? அன்றி, சிற்பியின் வழி தனது விழைவை நிறைவேற்றிய மன்னனின் மனநிலையா!

எங்ஙனமேனும் நமது சிந்தனைக்கு ஒரு மருத்துவ உண்மையும், வரலாற்று நிகழ்வும் அறியக் கிடைத்தன அன்றோ!

# உயர்தனிச் செம்மொழி *

வி.கோ.சூரியநாராயண சாஸ்திரி பி.ஏ.
(பரிதிமாற் கலைஞர். 1902) செந்தமிழ்த் தொகுதி

கடல் புடைசூழ்ந்த இவ்வுலகின் கண்ணே பயிலுறும் மொழிகள் அனைத்தையும் ஆராய்ந்து வகுத்து அடைவுபடுத்து நின்ற மொழிநூற் புலவர்கள் பலரும் அவற்றை ஆரிய மொழிகள், துரானிய மொழிகளென இருபகுப்பினுள் அடக்குவாராயினர். ஆரிய மொழிகளுள் அடங்குவன பலவற்றுள்ளும் சம்ஸ்கிருதம் தலை சிறந்ததொன்றாம். அவ்வாறே, துரானிய மொழிகளுள் அடங்குவன பலவற்றுள்ளும் தமிழ்மொழி தலைசிறந்ததொன்றாம். எனவே சம்ஸ்கிருதமும் தமிழும் வேறு வேறு மொழிகளென்பது வெள்ளிடை மலையென விளங்கும். ஆகவும் சிலர் தமிழ் முன்னதன் வழிமொழியேயன்றித் தனிமொழியன்றென வாய்கூசாது கூறுவாராயினர். சம்ஸ்கிருதமுந் தமிழும் ஒரே நாட்டின்கண் முறையே வடக்கினுந் தெற்கினுமாக வழங்கிய காரணம் பற்றி இவ்விரண்டுந் தம்மிற் சில்லாற்றாற் கலப்பனவாயின. அங்ஙனங் கலப்புழி, ஒன்று பேச்சு வழக்கற்று ஏட்டு வழக்காய் மட்டில் நிற்ப, மற்றொன்று இருவகை வழக்கினும் நின்றமையான் முன்னதன் சொற்பொருள்கள் பல பின்னதன்கட் போத்து வழக்கேற்ப வாயின. இது மொழி நான் முறையே. இதனை யெய்யாதார் கூற்று ஒதுக்கற்பாலதென விடுக்க.

இனி மொழிநூற் புலவர்கள் வகுத்தவகை ஒருபுறமிருப்பச் சிலர் தமிழ் மொழியின் ஏற்றமுணராது மயங்கிப் பிறிதுபட வகுத்தனர். (வடமொழியை உயர்தனிச் செம்மொழியினுந் தென் மொழியை *உண்ணாட்டுமொழியினும் அடக்கி வகைப்படுத்தினர். அங்ஙனம் வகைப்படுப்புழி ஒன்று உயர்வும் மற்றொன்று தாழ்வுமாம் என்ற உட்கருத்துடன் படுப்பாராயினர். அவ்வுட்கருத்துச் சின்னாட்களில் வலியுறுவதாயிற்று. தனிமொழி யொன்றை அதன் வழிமொழிகளோடு வகைப்படுத்தலாமோ? அது முன்னதனை இழிவுபடுத்த தாகாதோ? தமிழினை உண்ணாட்டு மொழிகளுட் படுத்ததே யன்றித் தெலுங்கு, கன்னடம் மலையாளமாகிய அதன் வழிமொழிகளோடு ஒரு நிகரெனக்

கூறலாமோ? ஆரிய மொழிகளுட்டலை நின்ற வடமொழியை அதன் பாகதங்களோடு ஒருங்கு வைத்து எண்ணத்துணியாமை போலத் துரானிய மொழிகளுட்டலை நின்ற தென்மொழியை அதன் வழிமொழிகளோடு ஒருங்கு வைத்தெண்ணத் துணியா திருத்தலே அமைவுடைத்து.

இவ்வாறாகவும் நமது சென்னைச் சர்வகலா சாலையார் மேற்கூறியாங்குத் தமிழை யிழிவு படுத்து வகுத்த போதே, தமிழறாயினார் முற்புகுந்து அவ்வாறு வகைப்படுத்தல் சாலாதென மறுத்திருத்தல் வேண்டும். அப்போழ்தெல்லாம் வாய்வாளாமை மேற்கொண்டிருந்து விட்டனர் நந்தமிழ் மொழியாளர். ஆதலின் இப்போழ்தத்துச் 'சர்வகலாசாலை விசாரணை'யிற் றமிழ்மொழிக் கல்வியை யோக்கியதைப் பட்டப்பரீ க்ஷைகளினின்றும் ஒதுக்கி விட்டனர். வடமொழிமட்டில் உயர்தனிச் செம்மொழி யாதலின் வைத்துக் கொள்ளப்பட்டது.

ஈதென்னை வம்பு! அவ்வுயர்தனிச் செம்மொழி யென்பத னிலக்கணந் தானென்னை? அதனைச் சிறிது ஆராய்வோம். தான் வழங்கும் நாட்டின் கண்ணுள்ள பலமொழிகட்குந் தலைமையும் அவையிற்றினும் மிக்க மேதகவுடைமையு முள்ள மொழியே உயர்மொழி யென்பது. இவ்விலக்கணத்தா னாராய்ந்தவழி, நந்தமிழ்மொழி தென்னாட்டில் வழங்குந் தெலுங்கு கன்னட மலையாள துளுவங்களுக் கெல்லாந் தலைமையும் அவையிற்றினும் மிக்க மேதகவுடைமையாற்றானும் உயர்மொழியே யென்க. தான் வழங்கு நாட்டிற்பயிலும் ஏனைய மொழிகளினுதவியின்றித் தனித்தியங்கவல்ல ஆற்றல்சான்றதே தனிமொழி யென்னப்படும். தான் பிறமொழிகட்குச் செய்யுமுதவி மிக்கும் அவை தனக்குச் செய்யுமுதவி குறைந்து மிருத்தலே வழக்காறு. தமிழ்மொழியினுதவி களையப்படின், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலியன இயங்குதலொல்லா; மற்று அவையிற்றினுதவி களையப்படினுந் தமிழ்மொழி சிறிதுமிடர்ப்படுதலின்றித் தனித்து இனிமையினியங்கவற்று. இஃது இந்திய மொழி நூற் புலவர்கள் பலர்க்கும் ஒப்பமுடிந்தது. ஆதலின் நம் தமிழ்மொழி தனிமொழியே

யென்க. இனிச் செம்மொழியாவது யாது? (திருந்திய பண்புஞ் சீர்த்தநாகரிகமும், பொருந்திய தூயமொழி புகல் செம்மொழியாம் என்பதிலக்கணம்) இம்மொழி நூலிக்கணம் நம்முடைய தமிழ்மொழியின்கண்ணும் அமைந்திருத்தல் தேற்றம். என்னை? இடர்ப்பட்ட சொன்முடிபுகளும் பொருண்முடிபுகளுமின்றிச் சொற்றான் கருதிய பொருளைக் கேட்டான் தெள்ளிதினுணரவற்றாய்ப் பழையன கழிந்து புதியன புகுந்து திருத்தமெய்தி நிற்றலே திருந்திய பண்பெனப்படுவது. இது தமிழ்மொழியின்கண் முற்றுமமைந்திருத்தல் காண்க. நாட்டின் நாகரிக முதிர்ச்சிக் கேற்பச் சொற்களும் ஏற்பட்டுப் பாடைக்கும் நாகரிக நலம் விளைத்தல் வேண்டும். அவ்வாறு சொற்களேற்படுமிடத்துப் பிறபாடைச் சொற்களன்றித் தன் சொற்களே மேற்கோடல் வேண்டும். இவையும் நம் உயர்தனித் தமிழ் தூய்மொழியுமாம். எனவே தமிழ் செம்மொழி யென்பது ஒருதலை. இது பற்றியன்றே தொன்று தொட்டு நந்தமிழ்மொழி 'செந்தமிழ்' என நல்லிசைப் புலவரான் நவின்றோதப் பெறுவதாயிற்று.

ஆகவே தென்னாட்டின் கட் சிறந்தொளிராநின்ற நம் அமிழ்தினுமினிய தமிழ்மொழி எவ்வாற்றானாராய்ந்த வழியும் உயர்தனிச் செம்மொழியேயாமென்பது திண்ணம். இத்துணையுயர்வுஞ் சிறப்பும் வாய்ந்த நம் அருமைத் தமிழ்மொழியை உண்ணாட்டுப் புன்மொழிகளோ டொருங்கெண்ணுதல் தவிர்த்து, வடநாட்டுயர் தனிச் செம்மொழி சமஸ்கிருதமெனக் கொண்டாற்போலத் தென்னாட்டுயர் தனிச்செம்மொழி தமிழெனக் கொண்டு விதிகள் வகுத்தலே ஏற்புடைத்தாம். இதனை நமது கனம்பொருந்திய இராசப் பிரதிநிதியவர்களும், சர்வகலாசாலையின் அவயவிகளும் உள்ளவாறே கவனித்து நடப்பார்களாக. இவர்கள் தமக்கு என்றுங் குன்றாப் பழியை விளையத்தக்க செயலிற் புகாது புகழ்பயக்கற்பால நல்லாற்றிற் சென்று நம் தமிழ் மொழியும் உயர் தனிச் செம்மொழி யென்றே கொண்டொழுகுவார்களாக.) ஆலவாயிற் பெருமானடிகளாகிய இறையனார் திருவருள் பெற்ற நம் தமிழ்மக்கள் என்றுந் தலைகவிழாதொளிர்க.

# மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் சித்திரகவிக் கல்வெட்டும் சிவபுராணக் கூறுகளும்

முனைவர் பி.ஆறுமுகம்,

மதுரை.

## முன்னுரை

மதுரை நகருக்கு மங்காத புகழைத் தந்துகொண்டிருப்பது அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயிலில் கிழக்காடிவீதியில் புகழ்பெற்ற வன்னிமரத்து விநாயகர் சன்னிதி அமைந்துள்ளது. இந்தச் சன்னதியின் வடதிசையில் ஒரு சிறிய கல்மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில் பல கற்றூண்கள் வரிசையாக அமைந்துள்ளன. இவற்றில் கிழக்கு மேற்காகச் செல்லும் கற்றூண் வரிசையில் இரண்டாவது கற்றூணில் (தென்பகுதியில்) ஒரு கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு அமைந்துள்ள தூணில் பூ, மாலை, சந்தனம் வைத்துப் பக்தர்கள் வழிபடுகின்றனர். இதில் காளி தெய்வம் உறைந்திருப்பதாக நம்பப்படுகிறது. இக்கல்வெட்டை ஆய்ந்ததில் இது சித்திரகவிக் கல்வெட்டுப் போலவும் தோன்றுகின்றது. அச்சித்திரகவிக் கல்வெட்டையும் அது உணர்த்தும் செய்தியையும் ஆய்ந்து வெளிக்கொணர்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## சித்திரகவி விளக்கம்


தமிழில் ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரக்கவி எனப் பல வகைக் கவிகள் உள்ளன. அவற்றுள், "மாலைமாற்று, சக்கரம் சுழிகுளம், ஏகபாதம், எழுகூற்றிருக்கை, காதைகரப்பு, கரந்துரைப்பாட்டு, தூசங்கொளல், வாவனாற்று கூடசதுக்கம், கோமுத்திரி, ஓரெழுத்துப்பா, வல்லினப்பா, மெல்லினப்பா, இடையினப்பா, சித்திரக்கா, விசித்திரக்கா, வித்தாரக்கா, விகற்பநடை, வினாவுத்தரம், சருப்பதோபத்திரம், எழுத்து வருத்தனை, நாகபந்தம், முரசபந்தம், நீரோட்டகம், சித்து, ஒருபொருட் பாட்டு, பலபொருட் பாட்டு, மாத்திரைப் பெருக்கம், மாத்திரைச் சுருக்கம், எழுத்துப்

பெருக்கம், எழுத்துச் சுருக்கம் இவை முதலிய தெரிந்து பாடுவது சித்திரக்கவியாகும்"[1] என்கிறது அபிதான சிந்தாமணி.

'ஆசுகவி; மதுரகவி, சித்திரக்கவி; வித்தாரக்கவி ஆகியவை இடைக்காலத்தில் வழக்கத்தில் இருந்த கவிகள் ஆகும்'[2] என்கிறார் அரிகேசவன்.

"கோமூத் திரியே கூடசதுக்கம்
மாலை மாற்றே யெழுத்து வருத்தனம்
நாக பந்தம் வினாவுத் தரமே
காதை கரப்பே கரந்துறைச் செய்யுள்
சக்கரஞ் சுழிகுளஞ் சருப்பதோ பத்திரம்
அக்காச் சுதகமு மவற்றின் பால"

என்று சித்திரகவியின் வகைகளைத் தண்டியலங்காரம் உணர்த்துகிறது. அவற்றுள் 'ஒன்பதாவதாக வருவது சக்கரபந்தம்; இது நான்காரைச் சக்கரம். ஆறாரைச் சக்கரம், எட்டாரைச் சக்கரம் என மூன்று உட்பிரிவுகளை உடையது. அம்மூன்று உட்பிரிவுகளுள் நான்காரைச் சக்கர பந்த சித்திரகவியானது நான்கு ஆரங்களைக் கொண்டு சக்கரபந்தமாகவும் அமையும்'[4] எனத் தண்டியலங்கார நூலில் விளக்கம் தரப்பட்டிருக்கிறது.



அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் வன்னிமர விநாயகர் சன்னதி நான்காரைச் சக்கரபந்த சித்திரகவிக் கல்வெட்டு



## இக்கல்வெட்டை வாசிக்க வேண்டிய முறை

இக்கவியின் மையத்தில் 'நீ' என்ற நெடில் அமைந்துள்ளது. இந்த மைய எழுத்தையும் பக்கவாட்டில் உள்ள எழுத்துக்களையும் தொடராக்கி வாசிக்க வேண்டும். அவற்றை உற்றுநோக்கி ஆராய்ந்தால் அவை சிவபுராணக் கூறுகளை உணர்த்துவனவாக உள்ளன.

## சித்திரக்கவியும் சிவபுராணக் கூறுகளும்

வன்னிமர விநாயகர் சன்னிதியில் அமைந்துள்ள கல்வெட்டில் 'நீலகாளிகனாய நீ', 'நீயனாமலைவெகநீ', 'நீகவெடனுமாகி நீ', 'நீகிமாகரிகால நீ' என்று வாசிக்க வேண்டும். இவ்வரிகளைப் பாடலாக அமைக்கும் போது,

"நீலகாளி கனாய நீ
நீயனாமலை வேக நீ
நீக வேடனுமாகி நீ
நீகி மாகரி கால நீ"

என்ற பாடல் கிடைக்கிறது. இனி இந்நான்கு தொடர்களிலும் அமைந்துள்ள புராணச் செய்திகளை நிரலாகக் காணலாம்.

## நீலகாளி கனாய நீ

'நீல காளி கனாய நீ' என்பதில் அமைந்துள்ள புராணக் கருத்து வருமாறு: 'தாருகாசுரனால் துன்பமடைந்த தேவர்கள் பெண்களுருக் கொண்டு சிவபெருமானை அடைந்து தாருகாசுரனால் தாங்கள் அடையும் துன்பங்களைக் கூறினர். பெண்ணாலன்றி வேறு எவராலும் இறப்பு என்பது இல்லாத தாருகனை வெல்லச் சிவபெருமான் சக்திக்குக் கட்டளையிட்டார். அப்பொழுது தேவியின் ஒரு கலை சிவனின் விஷக்கறை படிந்து கனற்கண்ணிற் பிறந்து வெளிப்பட்டது. அவ்வுரு காளமாகிய விஷக்கறை படிந்து வந்ததால் காளி எனப் பெயர் பெற்றது. இவ்வாறு பிறந்த காளி தனது சினத் தீயால் தாருகனை நீறாக்கினாள். இவளிடம் பிறந்த சினத்தீ குழந்தையுருக் கொண்டெழுந்தது. இதனை நோக்கிய காளி குழந்தைக்குப் பாலூட்டினாள். சிவபெருமான் குழந்தையையும் பாலையும் தம்மிலொடுக்கினார். ஒடுக்கிய சிவபெருமானிடமிருந்து எட்டு உருக்கொண்டு வைரவமூர்த்தி தோன்றினார்[5] சிவனின் நீலநிற

விஷக்கறை படிந்து, தேவியின் கனற்கண்ணில் பிறந்தவள் 'நீல காளி' என்பதை மேற்கண்ட புராணம் உணர்த்துகிறது. இந்தச் சிவபுராணத்தை நினைவூட்டும் வகையில், 'நீலகாளி கனாய நீ' (கனாய என்பது கனலாகிய சிவனே) என்று சித்திரகவிக் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டிருக்கிறது.

## நீயனாமலை வெக நீ

'நீயனாமலை வெக நீ' எனும் தொடர் உணர்த்தும் புராணக் கருத்து வருமாறு: 'திருமாலும் பிரம்மனும் தம்முள் யார் உயர்ந்தவர் என்பது குறித்துத் தங்களுக்குள் முரண்பட்டுக் கொண்டனர். இதனால் வருந்திய தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர். அப்போது சிவபெருமான் அனைத்து உயிர்களுக்கும் அருள்பாலிக்க வேண்டியும், திருமால் பிரம்மன் இருவருக்குரிய முரண்பாட்டை நீக்க வேண்டியும், இருவருக்கும் இடையே மேலும் கீழுமுள்ள அண்டகோடியெல்லாம் கடந்து நிற்கும் தழல் உருவான ஒரு மலையாகி நின்றார். இந்தத் தழற்பிழம்பைக் கண்ட பிரம்மனும் திருமாலும் அஞ்சி நடுக்குற்றுப் போரினை நிறுத்தினர். பிறகு இந்த மலையின் அடியையாவது முடியையாவது காண்பவரே பெரியவர் என்று தமக்குள் முடிவு செய்துகொண்டு திருமால் பன்றி வடிவம் கொண்டு நிலத்தை அகழ்ந்தும், பிரம்மன் அன்னப்பறவை வடிவம் கொண்டு வானில் பறந்தும் சென்றனர். இருவராலும் இறைவனின் அடியையும் முடியையும் காணமுடியவில்லை'[6] என்பது இத்தொடர் உணர்த்தும் புராணக் கருத்தாகும். இதைத்தான் நீயனாமலை வெக (நெருப்பு) நீ என்று சித்திரக்கவி உணர்த்துகிறது. இங்கு 'வேக' என்பது 'வெக' என வந்துள்ளது.

> "தாள்நுதல் செய்துஇறை கர்ணய மாலொடு
>             தண் தாமரை யானும்
> நீணுதல் செய்து ஒழிய நிமிர்த்தான் எனது
>             உள்ளம் கவர் கள்வன்"[7]

என்ற ஞானசம்பந்தர் தேவாரக் கருத்தும் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

## நீக வெடனுமாகி நீ

மகாபாரதத்தில் 'துரியோதனிடம் சூதாட்டத்தில் தோற்ற பாண்டவர்கள் பாஞ்சாலியுடன் துவைதவனம் வந்து சேர்கின்றனர். அங்கு சூரியதேவன் அருளால் அட்சய பாத்திரம் பெற்றுக் குறைவின்றி உணவைப் பெற்று வாழ்ந்து வந்தனர். இச்செய்தியைக் கேள்விப்பட்ட துரியோதனன் துர்வாச முனிவரின் உதவி கொண்டு பல இன்னல்களைத் தருகின்றான். அப்போது பாஞ்சாலி கண்ணனை வேண்டத் துன்பங்கள் நீங்குகின்றன. கண்ணனின் உதவி கண்டு தருமன் மனம் நெகிழ்ந்து கண்ணனிடம் நன்றி கூறுகின்றான். அதற்குக் கண்ணன், எல்லாம் சிவபெருமானின் அருள் என்று சொல்லி, சிவபெருமான் தான் தீயவர்களை அழிக்கும் சக்தியை எனக்குத் தந்தார் என்று கூறி நீங்களும் சிவவழிபாடு செய்யுங்கள், உங்களுக்கு நேரும் துன்பங்கள் பனி போல விலகும்' எனக் கூறுகிறார். இதே கருத்தைப் பாண்டவர்களுக்கு வேதவியாசரும் கூறுகிறார்.

இதனைக் கேட்ட அர்ச்சுனன் ஒற்றைக் காலால் கடுந்தவம் செய்கிறான். இதனை அறிந்த துரியோதனன் மிகுந்த கோபமடைந்து அர்ச்சுனன் தவத்தை எப்படியாவது கலைத்துவிட எண்ணி அசுரனைப் பன்றி உருவில் அனுப்பி வைத்தான். இதனை அறிந்த இந்திரன் அர்ச்சுனன் தவத்திற்கு இடையூறு ஏற்படாமல் இருக்கச் சிவனிடம் வேண்டுகிறான். உடனே சிவபெருமானும் வேடுவனாகச் சென்று பன்றி உருவில் வந்த மூகனை அம்பெய்து கொல்கிறார். அந்த அம்பை எடுத்துவர சிவன் சிவகணத்தை அனுப்புகிறார். ஆனால் அர்ச்சுனன் இதற்கு உடன்படவில்லை. இதனைச் சிவகணங்கள் சிவனிடம் கூற, அர்ச்சுனனுக்கும், சிவனுக்கும் போர் மூழ்கிறது. அண்டமே அதிர்ந்தது. அர்ச்சுனன் காண்டீபத்தை எடுத்து ஈசனின் தலையைத் தாக்கினான். அந்த அடி இறைவனுக்கு மட்டுமல்ல எல்லா உயிரினங்கள் மீதும் விழுந்தது. அடித்த அர்ச்சுனன் மீதும் விழுந்தது. அதிர்ச்சியடைந்த அர்ச்சுனன் எதிரே நின்ற வேடனைப் பார்த்தான். வேடன் அங்கே இல்லை. இதனைக் கண்டு அர்ச்சுனன் வியக்க, அங்கே சிவபெருமான் புன்னகையுடன் காட்சியளித்தார். பின் சிவபிரானிடம் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்கிறான் அர்ச்சுனன். அதுகண்ட சிவன், 'அர்ச்சுனா! கவலை வேண்டாம். உன்னைச் சோதிக்கவே இவ்வாறு நாடகமாடினோம்' என்று

கூறி எவராலும் வெல்ல முடியாத பாசுபதாஸ்திரத்தை அர்ச்சுனனுக்கு அளித்தார். இவ்வாறு சிவன் வேடனாகச் சென்று அர்ச்சுனனின் தவத்தைக் கலைக்க முயற்சித்த மூகன் என்ற பன்றியை அழித்து அர்ச்சுனனின் அகம்பாவத்தையும் அழித்து அர்ச்சுனனுக்கு அருளினார்'[8] என்பது சிவபுராணச் செய்தியாகும். இப்புராணச் செய்தியையே 'நீக வெடனுமாகி நீ' என்ற சித்திரக்கவித் தொடர் உணர்த்துகிறது. "பார்த்தனுக்கு அன்று நல்கிப் பாசுபதத்தை ஈந்தாய்"[9] என்ற திருநாவுக்கரசர் தேவாரக் கருத்தும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

## நீகிமாகரி கால நீ

'நீகிமாகரி கால நீ' எனும் தொடர் உணர்த்தும் புராணச் செய்தி: 'கயாசுரன் என்பவர் மகிடாசுரன் புதல்வன். இவன் பிரமனை எண்ணித் தவம் புரிந்தனன். பிரம்மன் காட்சி தர, பிரம்மனை நோக்கிச் சகலரையும் வெல்லப் பெருவரங்களைக் கேட்டனர். அதற்குப் பிரம்மதேவர், 'நீ தேவர் முதலிய திரிலோகத்தவரையும் வெற்றி பெறுக. ஆனால் சிவமூர்த்தியிடஞ் செல்லாதொழிக' என வரந்தந்து மறைந்தனர். அசுரன் வரத்தின் வலியால் தேவர் முதலியோரை வருத்தினன். இதனால் தேவர்கள் சிவபெருமானிடம் அடைக்கலம் புகுந்தனர். அத்தேவர்களைப் பின்தொடர்ந்து அசுரனும் சிவசந்நிதி முன் சென்றான். சிவமூர்த்தி உக்கிரத் திருவுடன் தோன்றி அசுரனது மத்தகத்தில் திருவடி ஊன்றித் தோலையுரித்து உடுத்தனர். இவன் சிவபெருமானை எடுத்து விழுங்க, சிவபெருமான் அவனுடலினின்றும் வெளிப்பட்டு அவன் தோலையுரித்து உடுத்தினார் எனவும் புராணம் கூறும். மேலும் இவனைக் காசியில் சிவமூர்த்தி சூலத்தாற் குத்தி உலர்த்தித் தோலையுடுத்தனர்'[10] எனவும் புராணம் கூறும். இந்தச் சிவபுராணக் கருத்தை 'நீகிமாகரி கால நீ' என்று சித்திரக்கவித்தொடர் உணர்த்துகிறது. இப்புராணச் செய்தியை,

> "மத்தனை மதயானை யுரித்தவெஞ்
> சித்தனைத்திருவண்ணாமலையனை"[11]

என்ற தேவாரமும் உணர்த்துகிறது."

## முடிவுகள்

மீனாட்சி சுந்தரரேசுவரவர் திருக்கோயில் வன்னிமர விநாயகர் சன்னிதியில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு நான்காரைச் சக்கரபந்த சித்திரகவியேயாகும்.

சித்திரகவி இடைக்காலத்தில் வழக்கத்தில் இருந்தது ஆகும்.

மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் சித்திரக்கவிக் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் மண்டபத்தின் நுழைவு வாயில் மேற்கூரையிலும் தூண்களிலுமே செதுக்கப்பட்டிருக்கின்றன.

எல்லாச் சித்திரகவிக் கல்வெட்டுகளும் உ என்ற சிவமயமிட்டே வெட்டப்பட்டுள்ளன. இச்சித்திரகவிகளில் சிவபெருமான் அசுரர்களை அழித்த புராணக் கருத்துக்களே கூறப்பட்டுள்ளன.

இங்கு கூறப்பட்டுள்ள சித்திரகவியில் மொத்தம் பதினேழு எழுத்துக்கள் உள்ளன. அவற்றில் நான்கு விசித்திரமான புராணக் கூறுகள் உள்ளன. அதனால்தான் இக்கவிக்கு 'விசித்திரக்கா' என்ற பெயர் வந்தது போலும்.

இச்சித்திரக்கவியிலுள்ள ஒவ்வொரு எட்டு எழுத்துத் தொடரும் சுமார் எண்பது வரியில் அமைந்துள்ள சிவபுராணக் கூறுகளை உணர்த்துகின்றன. அதனால்தான் இக்கவிக்கு 'எழுத்துச் சுருக்கம்' என்ற பெயர் ஏற்பட்டது போலும்.

இக்கவியில் ஒவ்வோர் ஆரத்திற்குள்ளும் ஓர் எழுத்தே அமைந்துள்ளது. அதனால்தான் இக்கவிக்கு 'ஓரெழுத்தானாகிய உயர்ந்த பாட்டு' என்ற பெயர் வந்தது.

இச்சித்திரக்கவிக் கல்வெட்டில் புள்ளி எழுத்துக்கள் (ஒற்று) ஒன்றுகூட இல்லை. அதனால்தான் சித்திரக்கவிக்கு 'ஒற்றுப் பெயர்தல்' என்ற பெயரும் இருந்திருக்கிறது என்ற செய்தி புலனாகிறது.

சித்திரகவிகள் மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் அம்மன் சன்னிதி, சுவாமி சன்னிதி ஆகிய இடங்களில் வண்ண ஓவியங்களாகவும் வரையப்பட்டுள்ளன.

இச்சித்திரக்கவிக் கல்வெட்டில் 'காளி' என்ற இரண்டு எழுத்து வருவது கொண்டு இது 'காளி தெய்வம்' என நினைத்துப் பக்தர்கள் வணங்கி வருகின்றனர் என்பது தெரியவருகிறது.

இக்கவியில் இரட்டைச் சுழிக் கொம்பு (ே) வரவேண்டிய இரண்டு இடங்களிலும் ஒற்றைச் சுழிக் கொம்பு (ெ) வந்திருக்கின்றது.

'நீ' என்பது முன்னிலை உணர்த்தும் ஓரெழுத்து ஒரு மொழி. இக்கவியில் சிவன் முன்பு செய்த செயல்களை எடுத்து முன்னிலையாக இயம்புவனவாகக் கூறப்பட்டுள்ளது.

இன்று உலகம் போற்றும் சிறந்த கோயிலாகப் பண்டைய நாகரிக வளர்ச்சியின் தொட்டிலாக, சைவ சமயத்தின் சக்கரமாக, அச்சு ஆணியாக, ஆணி வேராக மதுரை மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயில் விளங்குகிறது. இதற்கு அன்று வாழ்ந்த மன்னர்கள், அமைச்சர்கள், ஆன்மிகப் பெரியோர்கள், சிற்பிகள் ஆகியோர் அமைத்த சிற்பங்களும் இதுபோன்ற சித்திரக்கவிகளுமே காரணங்கள் எனில் மிகையாகாது.

குறிப்புகள்

1. அபிதான சிந்தாமணி, ப.374.
2. பெ.அரிகேசவன், வைணவம் அறிவோம் வாரீர், ப.37.
3. கொ. இராமலிங்கத் தம்பிரான் (உ.ஆ.), தண்டியலங்காரம், ப.223.
4. மேலது, ப.234
5. அபிதான சிந்தாமணி, ப.426.
6. ப.சரவணன், சிவபுராணம் உரைநடை வடிவச் சுருக்கம், பக்.13–15
7. பி.ரா. நடராசன் (உ.ஆ), திருஞானசம்பந்தர் தேவாரம், தோடுடைய செவியன் பதிகம், ஒன்பதாம் பாடல், வரி.1–4, ப.27
8. ப. சரவணன், சிவபுராணம் உரைநடை வடிவச் சுருக்கம், பக்.141–150
9. அ.பாண்டுரங்கன் (தொ.ஆ), அருணாசலப் புராணம், ப.114
10. அபிதான சிந்தாமணி, ப.351.
11. தி. சபாபதிபிள்ளை (உ.ஆ), அருணாசலப் புராணம், ப.9

# பாரதிதாசன் பாடல்களில் மானுட நேயம்

முனைவர் மா.இராமச்சந்திரன்
திருச்செந்தூர்.

## முன்னுரை

இலக்கியம் மனித உள்ளத்தைச் செம்மைப்படுத்தும் சிறந்த கருவியாகும். இதனால் இலக்கியத்தை உள்ளார்ந்த நோக்கோடு படைப்பது இலக்கியப் படைப்பாளன் கடமையாகும். இக்கடமை உணர்வோடு எழுது கோலைக் கையிலெடுத்தவர் கனகசுப்புரத்தினமாவார். பாரதிக்குத் தாசனாய்ப் பாட்டுக்கு வேந்தனாய்ப் பார்புகழ உயர்ந்த இவரது பாடல்களில் சமுதாயத்தை மாற்றுகின்ற புரட்சிக்கருத்துக்கள் பூத்துக்குலுங்கின. இவருடைய வரவால் தமிழ்க் கவிதையுலகு புதுப்பொலிவு பெற்றது. தமிழ்ப் படைப்பில் புதுமை மலர்ந்தது. இயற்கை, காதல், தமிழ், தேசியம் என்று பலதுறைகளைத் தம் படைப்பின் பொருளாகப் பதித்தார். இவ்வாறு பல்துறைகளைப் பற்றிப் பாடினாலும் இவருடைய உயர்ந்த நோக்கம் மனித நேய உணர்வை வெளிக் கொணர்வதாகவே அமைந்தது. சமகாலத்தில் மண்டிக்கிடந்த சமூகச்சீர்கேடு என்னும் களையினை அகற்றிச் சமுதாயப் பயிரைச் செழிப்பாக வளர்க்கும் உந்துதல் இவருடைய படைப்புகளில் காணப்பெறுகின்றன. பாரதிதாசன் பாடல்களில், படைப்புகளில் ஊடாடிக் கிடக்கும் மானுட நேய உணர்வினைத் தொகுத்துத் தருவதே இக்கட்டுரையின் நோக்கம்.

## மானுட நேயம்

உயிரினங்களில் உயர்ந்தவனாக மனிதன் கருதப்படுகிறான். இவனுடைய உள்ளத்தில் தான் சிந்தனை வளர்கின்றது. அன்பு, கருணை, விருப்பு, வெறுப்பு போன்ற பல்வேறு பண்புகள் தோன்றுகின்றன. மனிதன்தான் பல ஒழுகலாறுகளைக் கண்டு அவற்றை ஒழுக்கமுறையாகப் பாகுபடுத்துகிறான். இப்படிப்பட்ட பல பண்புகளில் உயர்ந்ததாக மானுட நேயம் விளங்குகின்றது. மானுட நேயம் என்பது 'மானுடன்+நேயம்' என்ற இரு சொற்களின் சேர்க்கையாகும். மானுடத்தின் முழுமையாகக் கருதப்பெறும் மனிதம் மீது செலுத்தப் பெறும் அன்பையே மானுட நேயம் என்னும் தொடர் குறிக்கின்றது.

மனித நேயம் என்பது மனித விழுமியங்கள், மனிதவிடுதலை ஆகியவற்றை முதன்மைப்படுத்துகின்ற கண்ணோட்டம். மனிதனை மனிதன் மதிக்கக் கற்றுக் கொள்ள வைக்கும் மந்திரம். மனிதனை மனிதனாக நினைக்கும் மனப்பாங்குதான் மனித நேயத்தின் அடிப்படையாகும். பாரதிதாசன் கூற்றுப்படி, மானிட சமுத்திரம் நானென்று கூவி, மக்கட் பெருங்கடலில் சங்கமம் ஆவதுதான் மனித நேயம். குவலயத்தின் அழுகுரலைக் கேட்டு அதனைத் தன் சிந்தையில் இருத்திச் செயலில் இறங்குகின்றவன் மனித நேயம் உடையவனாகின்றான். எல்லா உயிரும் தம் உயிர்போல எண்ணுகின்றவன், யான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக என்ற உணர்வுடன் செயல்படுகிறான். வாழு, வாழவிடு என்ற ஒப்பற்ற கருத்தை உருவாக்கியது மனித நேயம். தன்னைச் சுற்றித் தீங்கு நிகழும்போது அதனைத் தவிர்த்து நன்மை செய்வது மனித நேயத்தின் தலையாய பண்பாகும். நாடு, மொழி, சமயம், சாதி என்ற கட்டுகளை உடைத்து மனிதனின் துயர்கண்டு துடிப்பது, அவனுடைய உயர்வில், நலனில் அக்கறை காட்டுவது அவரவர்களுக்குரிய உரிமைகளைப் பறிக்காது "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உணர்வுடன் செயல்படத் தூண்டுவது. ஆண்டான், அடிமை, உடையோன், இல்லோன் என்ற உயர்வு தாழ்வற்ற உன்னத நிலையை உருவாக்க உதவுவது மனித நேயமாகும்.

## காலச்சூழல்

பாரதிதாசன் படைப்புகளில் மனிதநேய உணர்வு மிகுந்திருப்பதற்கு அவர் வாழ்ந்த காலச் சூழல் காரணமாகலாம். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கணிகன் பூங்குன்றனார் காலந்தொடங்கி,

> "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்
> வேறொன்றும் நினைத்தறியேன் பராபரமே"

என்று தாயுமானவர் காலத்திலும் இன்னும் அதற்குப் பின்னரும் கூடத்தமிழ் இலக்கியத்தில் மனித நேய உணர்வுகள் பாடப் பெற்றுள்ளன. ஆனாலும் பாரதம் அரசியல் விடுதலையை நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில் சமூக விடுதலையுணர்வை விதைக்கின்ற மனித நேய உணர்வு கொண்ட கவிஞர்களை எதிர்பார்த்துக் கிடக்கின்றது. தமிழிலக்கியம் இந்தக் காலக்கட்டத்தில் எழுதத் தொடங்கிய பாரதிதாசன் மனித நேய உணர்வுகளை

முதன்மைப் பொருளாக்கிக் கொள்கின்றார். இக்காலச் சூழலில் அவருக்கு முன்னோடியாக இருந்தவர்களாகப் பாரதியாரையும், பெரியாரையும் குறிப்பிடலாம். இறைவனையும், ஆன்மிக உணர்வையும் பாடிக் கொண்டிருந்த மரபை மீறி மனிதனையும் அவன் தேவையையும் பாட வேண்டும் என்ற உணர்வைப் பாரதியாரிடமிருந்து பாவேந்தர் பெற்றிருக்க வேண்டும்.

"இன்றைய தேவையை எழுதேல் என்றும்
முன்னாள் நிலையிலே முட்டுக என்றும்
வழக்கா றொழிந்ததை வைத்தொழு தித்தான்
பிழைக்கும் நிலைமை பெறலாம் என்றும்"

(பாரதிதாசன் கவிதைகள் ப.195,

புலவர்களில் மனநிலை இருந்ததை மாற்றியவர் பாரதி என்று பாரதிதாசன் குறிப்பிடுகிறார்.

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதர்க் கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திடல் வேண்டும்.

என்று பாரதியார் பாடியது அவர் உள்ளத்தில் புதிய எழுச்சியை உருவாக்கியிருக்க வேண்டும். இக்காலத்தில் ஈ.வே. ராமசாமிப் பெரியார் பகுத்தறிவு இயக்கம் தோற்றுவித்துக் 'குடியரசு' என்ற இதழையும் நடத்தினார்.

"ஏழை - பணக்காரத் தன்மையையும், கீழ்-மேல்
சாதியையும் முதலாளி-அடிமையையும் கொண்டதான
நிலைமைகள் நடைபெற ஆதரவாயிருக்கும்
கடவுள், மதம், தர்மம், சட்டம் ஒழிந்தே ஆகவேண்டும்"[1]

என்ற குறிக்கோளோடு தமிழகத்தில் பெரியாரின் பகுத்தறிவு இயக்கம் வளர்ந்து கொண்டிருக்கின்றது. பகுத்தறிவு இயக்கக் கருத்துகளைக் "குடியரசு" இதழில் எழுதும் வாய்ப்புப் பாரதிதாசனுக்குக் கிடைக்கின்றது. அரசியல் விடுதலையை முழுமையாகப் பாடி, சமுதாய மலர்ச்சியைத் தொட்டுச் சென்றார் பாரதியார். அவர் விட்டுச் சென்ற சமூகச் சார்புகளைப் பாரதிதாசன் முழுமையாகப் பாடியுள்ளார். இலக்கிய வடிவத்தைப் பாரதியாரிடமும் பாடும் கருத்துகளைப் பெரியாரிடமும் பாரதிதாசன் பெற்றார் என்று கூடக் கூறலாம்.

## பாரதிதாசனும் மானுட நேய உணர்வும்

மனித நேயத்தினை முழு உணர்வுடன் இலக்கியப் படைப்பாக்க வேண்டுமென்றால் அவ்வுணர்வு இயல்பாகவே உள்ளத்தில் பொதிந்திருக்க வேண்டும். மனித நேயத்தில் ஐந்து படி நிலைகளைப் பற்றிச் சேதுமணியன் கூறுவார்.[2]

1. மனிதனை மனிதன் என்பதற்காகவே போற்றும் மனப்பான்மை.
2. பிறரது தேவைகளை உணர்த்துவது.
3. பிறரது தேவைக்கு உதவுவது.
4. கிடைத்த தொழிலை நிறைமுயற்சியோடு மேற்கொள்வது.
5. இதனை அடையும் பக்குவத்தை மனிதன் வளர்த்துக் கொள்வது.

என்ற ஐந்தும் ஆகும் அவை. பாரதிதாசனின் ஆளுமை வளர்ச்சியிலும் இந்த நிலைகளைக் காண முடிகின்றது.

1931 ஆம் ஆண்டு புதுவையில் வீசிய புயல்காற்றில் பாரதிதாசன் சிக்கிக் கொள்கிறார். அவருடன் புதுவைகல்வே கல்லூரியின் கடைநிலை ஊழியரான வேலாயுதம், ஆலங்குப்பம் வைத்தியலிங்கம் ஆகியோரும் சிக்கிக் கொண்டனர். காற்றும் கனமழையும் கூடிய இரவில் பல இன்னல்களுக்கிடையே அவர்கள் இருவரையும் பாவேந்தர் காப்பாற்றுகின்றார். இச்செயலைக் கேட்ட அரவிந்தர் பாரதிதாசனைப் பாராட்டியுள்ளார்.[3] தன் உயிரையும் பொருட்படுத்தாது கடைநிலை ஊழியரின் உயிரைப் பாதுகாத்தது பாரதிதாசனிடம் மனிதனை மனிதன் என்பதற்காகவே போற்றும் மனப்பான்மை இருந்தது என்பதைக் காட்டுகின்றது.

மனித நேயத்தின் நான்காவது படியான கைக்குக் கிடைத்த தொழிலை நிறைமுயற்சியோடு மேற்கொள்ளும் பண்பு பாரதிதாசனிடம் இருந்தது. இதனை, "பக்தராக இருந்தபோது எவ்வளவு தீவிரமாகப் பக்திச் செயல்களிலும் சடங்குகளிலும் பழக்க வழக்கங்களிலும் ஈடுபட்டு வந்தாரோ, அது போன்றே சுய மரியாதை இயக்கத்தில் சேர்ந்த போதும் அதன் கொள்கைகளைப் பின்பற்றுவதிலும் பரப்பப்படுவதிலும் அதன் தொடர்பான செயல்களிலும் தீவிரமாக ஈடுபட்டார்.[5] என்பதன் மூலம் அறியலாம். பாரதிதாசன் வாழ்வின் ஒவ்வொரு காலக் கட்டமும் மனித நேயத்தை அடையும் பக்குவத்தைப் பெற்றிருந்ததையும் புரியமுடிகின்றது.

(தொடரும்)

# திருக்குறளில் வியப்பு

ஆறுவிரல் ஐம்பொறி
கள்ளக்குறிச்சி.

தமிழ் இலக்கண நூலாம் நன்னூல் (14) சுட்டிய 32 உத்திகளுள் 'ஏதுவின் முடித்தல்' என்பது ஓர் உத்தியாகும். காரணத்தை முதலில் கூறாமல் வியப்பில் ஆழ்த்தி, பின்னர் காரணத்தைக் கூறி முடித்தல் என்பதே இவ்வுத்தியின் பொருளாம். ஏது–காரணம். திருவள்ளுவர் பல குறட்பாக்களில் இவ்வுத்தியைப் பயன்படுத்தியுள்ளார். அவற்றில் சில குறட்பாக்களைக் காணலாம்.

கல்வியின் சிறப்பை நிறைபடக் கூறிய வள்ளுவர் 'கற்றதனாலாய பயனென்கொல்'? என்று கேட்டு நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார். பின்னர் அவர் 'வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்' என்று காரணத்தைக் கூறி முடிக்கிறார். குறள்–2.

உழவர் உழமாட்டார் (ஏரின் உழாஅர் உழவர்) என்று கூறி வள்ளுவர் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார். பின்னர் அவர் 'மழை வளம் குன்றுமானால் (புயல் என்னும் வாரி வளங்குன்றிக்கால்') என்று காரணத்தைக் கூறி முடிக்கிறார். குறள்– 14

'சாதலின் இன்னாதது இல்லை, இனிது அதூஉம்' என்று கூறுவதன் மூலம் துன்பம் தரும் சாதலை இனிது என்று கூறி வள்ளுவர் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார். பின்னர் அவர் 'ஈதல் இயையாக் கடை' என்று காரணத்தைக் கூறி முடிக்கிறார். குறள்– 230

'உள்ளியதெல்லாம் உடனெய்தும்' என்று கூறி வள்ளுவர் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார். பின்னர் அவர் 'உள்ளத்தால் உள்ளான் வெகுளி எனின்' என்று காரணம் கூறி முடிக்கிறார். குறள்– 309

அறிவின் சிறப்பைப் பலபடக் கூறிய வள்ளுவர் 'அறிவினால் ஆகுவது உண்டோ?' என்று கேட்டு நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார். பின்னர் அவர் 'பிறிதின் நோய் தன் நோய் போல் போற்றாக் கடை' என்று காரணத்தைக் கூறி முடிக்கிறார். குறள்– 315

கல்லாதவரைப் பலவாறாக இழித்துப் பேசிய வள்ளுவர் 'கல்லாதவரும் நனி நல்லர்' என்று கூறி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார். பின்னர் அவர் 'கற்றார் முன் சொல்லாதிருக்க பெறின்' என்று காரணத்தைக் கூறி முடிக்கிறார். குறள்– 403

'ஞாலம் கருதினும் கைகூடும்' என்று கூறி வள்ளுவர் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார். பின்னர் அவர் 'காலம் கருதி இடத்தாற் செய்யின்' என்று காரணத்தைக் கூறி முடிக்கிறார். குறள்– 403

'நன்மையே செய்க' என்று பல குறட்பாக்களில் கூறிய வள்ளுவர் 'நன்றாற்ற லுள்ளும் தவறு உண்டு' என்று கூறி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார். பின்னர் அவர் 'அவரவர் பண்பறிந்து ஆற்றாக் கடை' என்று காரணம் கூறி முடிக்கிறார். குறள்– 469

'கேட்டினும் உண்டோர் உறுதி' என்று கூறி வள்ளுவர் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார். பின்னர் அவர் 'கிளைஞரை நீட்டி அளப்பதோர் கோல்' என்று காரணம் கூறி முடிக்கிறார். குறள்– 769

திருக்குறளில் இவ்வகைக் குறட்பாக்கள் பல நிறைந்துள்ளன. வியப்பில் ஆழ்த்திய (மனதைத் தாக்கிய) செய்தி நெடுநாள் நினைவில் இருக்கும் என்ற உளவியல் கருத்தை அறிந்த வள்ளுவர் பல இடங்களில் இவ்வுத்தியைப் பயன்படுத்தி உள்ளார்.

திருக்குறள் நின்று நிலைத்து நினைவில் உள்ளதற்கு இதுவும் ஒரு காரணமேயாம்.

(சென்னையில் வடக்கு உஸ்மான் சாலை – மகாலிங்கபுரம் சாலையை இணைத்து புதிதாகக் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தை 30.3.2008 அன்று திறந்து வைத்து **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி)



# இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்றுங்கள்

கடந்த நான்கைந்து நாட்களாகத் தமிழகத்தின் தலைவர்கள் – ஒவ்வொரு கட்சிகளின் தலைவர்களும் கர்நாடகத்தினுடைய இந்த வேடிக்கைக் கூற்றை எதிர்த்து அறிக்கைகள் விடுகிறார்கள். ஆர்ப்பாட்டங்களை நடத்துகிறார்கள். அணிவகுத்துச் செல்கிறார்கள். அவர்களையெல்லாம் நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன், அவர்களின் தமிழ் உணர்வை நான் போற்றுகிறேன், புகழ்கிறேன். அதே நேரத்தில் நான் கர்நாடகத்திலே உள்ளவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். எதை நீங்கள் தமிழகத்தார் உரிமையோடு செய்ய இதுவரை வழி விட்டீர்கள்? காவேரியிலே இடைஞ்சல், அதைப் போலவே இன்றைக்கு ஒகேனக்கல் குடிதண்ணீர்– ஏற்கனவே இதற்கான ஒப்பந்தம் எல்லாம் போடப்பட்டு, கர்நாடக மாநிலத்தின் ஒப்புதலைப் பெற்று, மத்திய சர்க்காரும் சம்மதம் கொடுத்து, நிறைவேற்றப்படுகின்ற திட்டம் ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம். எங்களுக்குக் குடகிலே இருந்து வருகின்ற தண்ணீர் தான் இல்லை என்றால், குடிநீருக்காகப் பயன்தருகின்ற ஒகேனக்கல் தண்ணீரும் கிடையாதென்று சொன்னால் என்ன ஆவது?

இன்று மாலையிலே பத்திரிகைகளில் எல்லாம் கொட்டையெழுத்துச் செய்திகள். தமிழ்நாட்டு பஸ்களையெல்லாம் உடைப்போம். உள்ளே விடமாட்டோம், ஒகேனக்கல் திட்டத்தை நிறைவேற்றினால் தமிழ்நாட்டு பஸ்களை எல்லாம் உடைப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். பஸ்களை அல்ல, எங்கள் எலும்புகளை உடைத்தாலும் சரி, நாங்கள் அதற்காகக் கவலைப்படப் போவதில்லை. நிச்சயமாக ஒகேனக்கல் திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம் என்பதை மாத்திரம் நான், இது தான் அதைச் சொல்லக்கூடிய சரியான சூழ்நிலை, வாய்ப்பு என்ற முறையிலே எடுத்துச் சொல்லி, இந்தப் பாலம் கர்நாடகத்திலே உள்ள காங்கிரஸ் கட்சி அல்லாத– கர்நாடகத்திலே உள்ள கம்யூனிஸ்ட் கட்சி அல்லாத–மற்ற கட்சிகளைக் கேட்கிறேன். அந்தக் கட்சிகள் எல்லாம் – தேர்தலிலே நிற்கின்ற ஜனதா கட்சியாக இருந்தாலும் அல்லது அதற்குத் துணைபோகின்ற கட்சிகளாக இருந்தாலும், அந்தக் கட்சிகள் எல்லாம் சிந்தித்துப் பார்க்கட்டும்.

இதை வைத்து தேர்தலை நடத்துவதென்றால் ஒரு தேசத்திலே ஒரு பகுதியை அழித்துவிட்டு, ஒருபகுதி மக்களை பட்டினி போட்டுவிட்டு, அவர்களைத் தண்ணீரற்றவர்களாக ஆக்கிவிட்டு, அவர்களைத் தாகத்தால் தவிக்க விட்டுவிட்டு அவர்களுடைய திட்டங்களையெல்லாம் சீர்குலைந்து விட்டு நீங்கள் வாழ முடியும் என்று கருதினால், நீங்கள் வாழலாம். ஆனால் இந்தியாவின் ஒற்றுமை வாழாது, இந்தியாவின் பலம் வாழாது. இந்தியாவின் இறையாண்மை வாழாது. அதற்கு வழி வகுக்காதீர்கள்–கர்நாடகத்திலே உள்ள அவசரக்காரர்களே–நான் என்னைப் பொறுத்த வரையிலே பல முறை இப்படிப்பட்ட பிரச்சனைகள் நம்முடைய மாநிலத்திற்கும், பக்கத்து மாநிலத்திற்கும் வந்தபோதெல்லாம் பொறுமை காத்திருக்கிறேன். கேரளாவிற்கும் நமக்கும் இப்படிப்பட்ட பிரச்சனைகள் வந்தது உண்டு.

அப்போதெல்லாம் இரு மாநில ஒற்றுமை, அங்கு வாழ்வோரும் நாம் தான் – இங்கு வாழும் அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் சகோதரர்கள் தான்– "இந்தியாவின் ஒற்றுமையின் பெயரால் கேட்கிறேன், ஒருமைப்பாட்டின் பெயரால் கேட்கிறேன், இறையாண்மையின் பெயரால் கேட்கிறேன். வெறும் இந்தத் தண்ணீருக்காக மாத்திரமல்ல, கண்ணீர் விட்டுக் கேட்கிறேன்–இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள், இந்தியாவைப் பலகீனப்படுத்தாதீர்கள்'.' கன்னடமும், களி தெலுங்கும், கவின் மலையாளமும், துளுவும் என்ற இந்த மொழிகளுக்குச் சொந்தக்காரர்கள் எல்லாம் சகோதரர்கள் தான். நமக்குள்ளே சகோதரச் சண்டை வேண்டாம் என்று கருதுகிறவன் நான். யாரோ சில சமூக விரோதிகள் இதைப் பெரிதாக ஆக்கி, இதைத் தீப்பற்றச் செய்து விடுவார்கள். அதற்கு இடம் தரக்கூடாது என்று தான் பொறுமையாக இருந்து வருகிறேன். என்னுடைய பொறுமைக்கும் எல்லை உண்டு. அந்த எல்லையை–மத்திய அரசு உணரும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எனவே மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு, இன்றைக்கு அங்கே சிறு துளியாக இருக்கின்ற இந்தப் பகை உணர்வு வளராமல் பார்த்துக் கொள்ளவேண்டும். சிறு பொறி பெரும் தீயாக மாறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதையெல்லாம் இந்தியாவின் ஒற்றுமையின் பெயரால் கேட்கிறேன், ஒருமைப்பாட்டின் பெயரால் கேட்கிறேன், இறையாண்மையின் பெயரால் கேட்கிறேன். வெறும் இந்தத் தண்ணீருக்காக மாத்திரமல்ல, கண்ணீர் விட்டுக் கேட்கிறேன்–இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள், இந்தியாவை பலகீனப்படுத்தாதீர்கள் என்று வேண்டுகோள் விடுத்து இந்த அளவோடு இந்த விழாவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி : தமிழரசு

**செய்தி இதழ் – ஏப்ரல், 2008**

# ஞானி புகழ்ந்த மானி

தமிழாசிரியர் தெ.முருகசாமி
புதுச்சேரி

1. வந்தார் பாண்டித் துரைத் தேவர்
வளமார் பாதிரிப் புலியூர்க்கே !
செந்தமிழ் சிவத்திரு ஞானியாரைச்
சிறப்பாய்க் கண்டுரை யாற்றுகையில்
தந்தார் அடிகள் ஓர்கருத்தைத்
தமிழாண் டிட்ட மதுரையிலே
செந்தமிழ்ச் சங்கம் நிறுவிடவே
சிந்தையில் தூண்டுதல் செய்தாரே !

2. ஆதலால் தேவர், பாஸ்கரராம்
அன்புடன் பிறப்பைக் கலந்தாய்ந்து,
ஈதற் பெரிய உள்ளத்தால்
இருவரும் சேர்ந்தே தமிழ்ச்சங்கம்
காதலால் வைக்க முன்வந்தார் !
கருத்தைத் தந்த அடிகளையே
தோதாய் அழைத்து வந்தேதான்
தமிழ்ச்சங் கத்தைத் தொடங்கினரே !

3. நாடு முழுதும் சங்கத்தின்
நற்றமிழ் மணந்தான் பரவியதால்
ஈடிணை யில்லாத் தமிழ்ப் பணிதான்
எடுப்பாய் நாளும் வளர்ந்திடவே
கூடடை கின்றபறவையெனக்
குளிர்தமிழ் நாட்டின் அறிஞரெலாம்
வீடடை வார்போல் மாமதுரை
வித்தக நகரில் கூடினாரே !

4. ஏடு பதிப்பும் நடந்திடவே
எழிலார் நூல்பல வந்தனவே!
ஏடு "செந்தமிழ்" - எனும்திங்கள்
இதழும் வெளிவரச் செய்ததுடன்
பாடு பட்டே பைந்தமிழைப்
பரப்பும் நோக்கில் பாண்டித்துரை
தேடு கல்வி கற்பிக்கும்
தமிழ்க்கல் லூரியும் கண்டாரே!

5. ஞானி யாரும் தேவரவர்
நற்றமிழ் வளர்க்கும் முறைகண்டு
சீனி இனிப்பாய் மகிழ்ந்தேதான்
செந்தமிழ் வளர்க்கும் சேதுபுகழ்
மானி இவர்தான் மாத்தமிழ்க்கு
மன்னரும் என்றேபுகழ்ந்ததினால்
ஞானி புகழ்ந்த மானியென
நன்றாய் நாமும் புகழ்வோமே!


தொடர்பு முகவரி :

**ஆசிரியர், செந்தமிழ்,**

**மதுரைத் தமிழ்ச்சங்கம்,**

**மதுரை-625001.**

தொலைபேசி : **0452-6575615**

RNI Regd. No.: 5508/56 September 2008

## ஆசிரியர் குழு

டாக்டர் திரு. ந. சேதுராமன்

திரு. இரா. குருசாமி

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் கதிர் மகாதேவன்

அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ. எம்.ஃபில்.,
செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.
தொலைபேசி : (0452) 6575615

அச்சிடுவோர் : ஆசை அச்சகம், சாரதா காம்ப்ளக்ஸ், சிம்மக்கல், மதுரை–1.
தொலைபேசி : (0452)2622250, கைபேசி : 98434 32484